திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT
MADRAS RECORD OFFICE BUILD
140

ஸ்ரீ சுவாமி விவேகானந்தர்

மாலை 12] சாதாரண-புரட்டாசி-செப்டம்பர், 1970 [மணி 12

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



திருவிடைமருதூர்க் கும்பாபிஷேக விழாவில் திருவாவடுதுறை - தருமபுரம் ஆதின குரு மகா சந்நிதானங்களும், நமது அறநிலைய ஆணையர் அவர்களும், பிற பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

பொருளடக்கம்

1. இனியன் இடைமருதன்
2. ஆசாரக்கோவை
3. பழியின் பரிசு
4. வித்தகச் சான்றோர் விவேகானந்தர்
5. நீத்தல் விண்ணப்பம்
6. ஸ்ரீ வைஷ்ணவத் திவ்விய தேசங்கள்
7. வாரணவாசி
8. அபிராமி அந்தாதி
9. மதிப்புரைகள்
10. கட்டுரைப் பட்டியல்

மூவண்ணப்படம் : ஸ்ரீ மூகாம்பிகை, திருவிடைமருதூர்.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- — **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 12] சாதாரண — புரட்டாசி — செப்டம்பர், 1970 [மணி 12

"இனியன் இடைமருதன்"

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை:

திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானுக்குப் பற்பல பெயர்கள் உண்டு. மருதமரத்தின் கீழ் வீற்றிருந்து வாழ்பவன் ஆதலால் மருதவாணன் (வாழ்நன்) என்றும்; சிறந்த பல சிவாலயங்களைத் தனக்குரிய பரிவார தேவதைகளாகக் கொண்டு, அவற்றிற்கு நடுவே கருப்பக்கிரகம் போல அமைந்துள்ள இக்கோயிலில் எழுந்தருளி இருப்பதனல், ஏனைய பல இலிங்கங்களுக்கெல்லாம் மிக மேலான சிறப்புடைமைபற்றி **மகாலிங்கம்** என்றும்; இங்குள்ள பெருமானுக்குப் பெயர்கள் வழங்கும்.

இப்பெருமானையே மாணிக்கவாசகர் **''ஆனந்தத்தேன்''** என்று குறிப்பிட்டு ஒரு சிறப்புப் பெயர் அமைத்து வழங்குகின்றார். ''அந்த இடைமருதில் ஆனந்தத்தேன் இருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ'' என்பது திருவாசகம். இத்திருவாசக வரிகளால், மருதவாணர் ஆகிய மகாலிங்கப் பெருமானை, மாணிக்கவாசகர் ''ஆனந்தத்தேன்'' என்றும்;

திருவிடை மருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயிலில் நிகழ்ந்த திருக்குடமுழுக்குப் பெருவிழாவில் திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணைப்படி ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (15-7-70)

—ஆசிரியர்.

211,858
158582

அவர் எழுந்தருளி விளங்கும் இத்தலத்துக் கோயிலே, அத்தேன் இருக்கின்ற "பொந்து" என்றும்; சிறந்த முறையில் உருவகம் செய்து பெயரிட்டு வழங்கி யிருத்தலைக் காணலாம்.

இவ்வாறே இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்து, இத்தலத்தை வழிபட்டு அருள்பெற்ற அரும் பெரும் சான்றோராகிய பட்டினத்தடிகளும், தாம் இயற்றிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில், இங்குள்ள மருதவாணப் பெருமானை "**மருத மாணிக்கத் தீங்கனி**" என்று, அழகிய சிறந்த பெயரால் வழங்கி இருக்கக் காண்கின்றோம்.

இங்ஙனம், பலரும் பல சிறப்புப் பெயர்களால் குறிப்பிட்டுப் போற்றித் துதித்து மகிழும் மகாலிங்கப் பெருமானுக்குத், திருநாவுக்கரசரும் ஒரு சிறப்புப் பெயர் இட்டு வழங்கிப் போற்றி மகிழ்கின்றார். அங்ஙனம் திருநாவுக்கரசர் இத் திருவிடை மருதூர் இறைவனுக்கு இட்டருளிய சிறப்புப் பெயரே "**இனியன்**" என்பது.

சிவானுபூதி:

இறைவனை நாம் இருவகை முறைகளில் அறியலாம். ஒன்று அறிவால் அறிதல்; மற்றொன்று அனுபவத்தால் அறிதல். அறிவால் அறிதலை ஆராய்ச்சி என்றும்; அனுபவத்தால் அறிதலை அநுபூதி என்றும் பெரியோர்கள் குறிப்பிடுவர். சிவஞான போதச் சிறப்புப் பாயிர உரையில், நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஆசிரியர் மாதவச் சிவ ஞானயோகிகள், "**நாடி** எனவே ஆராய்ச்சியால் என்பதும், **கண்டு** எனவே அநுபூதியால் என்பதும் பெற்றாம்" என விளக்க உரை வரைந்திருத்தல், இவ்வுண்மையைச் செவ்வி தின் வலியுறுத்தும். "அருளினால், ஆகமத்தே அறியலாம்; அளவினாலும் தெருளலாம்" என்றபடி, இறைவனின் பேரறிவு பேராற்றல் முதலிய இயல்புகளை எல்லாம், நாம் நமது அறிவினால் ஓரளவு ஆராய்ந்து கருதி உணரமுடியும். ஆனால் "இறைவன் இனிய இயல்பினன்" என்பதனையோ, உள்ளவாறு அனுபவித்தல் ஒன்றின் வாயிலாகவே உணருதல் இயலும்.

திருநாவுக்கரசர் ஒப்புயர்வற்ற சிறந்த சிவானுபூதிச் செல்வர்; இறைவனின் அருளில் தோய்ந்து திளைத்து மூழ்கி நன்கினிது அனுபவித்து உணர்ந்தவர். அவ்வனுபவத்தின் பயனாகவே அவர், இத்திருவிடைமருதூர்ப் பெருமானின் இயல்பினை "**இனியன்**" என்னும் சொல்லால் திறம் தெரிந்து சுருங்கச் சொல்லி விளங்க வைத்தருள்கின்றார்.

திருக்குறுந்தொகை:

இடைமருதனின் இனிய இயல்பினை, நம் அறிவிற்குப் புலப்படும் வகையில், திருநாவுக்கரசர் படிமுறையே வைத்துக்காட்டி விளக்கி யருள்கின்றார். இனிய சுவைமிக்க கனி, கட்டி பட்ட கரும்பு, பனிமலர்க்குழற்பாவை நல்லார், தனிமுடி கவித்து ஆளும் அரசு ஆகிய எல்லா வற்றிலும், மிக மேலான இனிமையைத் தருபவன் இடைமருதூர்ப் பெருமான் என்று, படிமுறையே உணர்த்தும் பாங்கும், "மேன்மேல் உயர்ச்சி" என்னும் அணியும் அமையுமாறு,

கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே

என்னும் அரிய சிறந்த, அழகிய திருக்குறுந்தொகைப்பாடலைத் திருநாவுக்கரசர் அருளிச் செய்கின்றார். பாடல் சிறிய அளவிலுள்ள குறுந்தொகையேயாயினும், இதன் அருமை பெருமைகளும், சிறந்த பொருள் நுணுக்கங்களும், விரிந்து பரந்தனவாகும்.

திருநாவுக்கரசர்:

திருநாவுக்கரசர் இறைவனை வெறுஞ் சொல்லளவில் '**இனியன்**' என்று குறிப்பிட்டார் அல்லர். அவனது அருளின் அருமை பெருமைகளைத் தாமே தம்முடைய வாழ்வில் சாலவும் அனுபவித்து உணர்ந்ததன் பயனாகவே, இனியன் என்று குறிப்பிட்டு அருளினார். 'மூர்த்தி சிறிது கீர்த்தி பெரியது' என்பது போல, 'இனியன்' என்ற இச்சொல் சிறியதே யாயினும், இதனுள் அமைந்து கிடக்கும் அனுபவ உணர்வு மிகமிகப் பெரியதாகும்.

திருநாவுக்கரசர் உலகத்துக்குத் 'தாச மார்க்கம்' என்னும் அடிமை நெறியை உணர்த்தப் போந்தவராவர். இறைவன் தலைவன், திருநாவுக்கரசர் அடியவர் அல்லது ஊழியர். இறைவன் ஆட்கொண்டவன், திருநாவுக்கரசர் ஆட்கொள்ளப் பெற்றவர். உலக மக்களிடையிலும், ஆட்கொள்வோரும், ஆட்கொள்ளப் பெறுவோரும் உண்டு. உலகில் ஆட்கொள்பவரைத் தலைவர் என்றும், எசமானர் என்றும் பலவாருகக் கூறுவர். ஆட்கொள்ளப் படுபவரை அடியவர், ஊழியர், வேலையாள் எனப் பலவகைகளில் குறிப்பிடுவர். ஆட்கொள்வோராகிய உலகியல் தலைவர்களுக்கும், இறைவனாகிய அருளியல் தலைவனுக்கும் இடையே உள்ள, எல்லையற்ற வேறுபாட்டினைத் தம்முடைய வாழ்வில் தகவுற அறிந்துணர்ந்து தெளிந்தவர் திருநாவுக்கரசர்.

மகேந்திரவர்ம பல்லவ மன்னனிடம் (கி. பி. 600—630), ஆளாய் அடிமையாய் இருந்து பல அல்லல்களை அடைந்து, பின்னர் ''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்'' என்று வீரமுழக்கம் செய்து, சிவபெருமானின் திருவடிகளில் அடைக்கலம் புகுந்து, மீளா அடிமையானவர் திருநாவுக்கரசர்! உலகியல் தலைவர்களின் கொடுமையை அறிந்துணர்ந்த அவருக்கு, அருளியல் தலைவனுகிய இறைவனின் இனிய இயல்பு தெற்றெனப் புலப்பட்டது. அதனுலேயே அவர் தமது தலைவனுகிய இறைவனை, 'இனியன்' என்னும் சொல்லால் உள்ளவாறு உணர்ந்து உரைக்கின்ருர். இறைவனுகிய தலைவனை, இனியன் என்று அவர் குறிப்பிட்டமைக்குக் காரணங்கள் பல இருத்தல் கூடும். ஆதலின் இறைவனுகிய தலைவனின் இனிய இயல்புகள் எவ்வெவையாக இருத்தல் கூடும் என்று, நாம் இங்கு இயன்றவரை ஒரு சிலவற்றையேனும் சிந்தித்து அறிதல் நலம் பயக்கும்.*

'இனியன்' பற்றிய சிந்தனைகள் :

(1) அடிமை செய்தல் என்பது பொதுவாக, இழிவும் துன்பமும் பயக்கும். உலகியல் வாழ்வின் எல்லாத் துறைகளிலும், நாம் இவ்வுண்மையைச் செவ்விதின் அறியலாம். துன்பம் தருவதும், இழிவு விளைவிப்பதுமான இவ் வடிமைத்திறனே, இறையருள் வயப்படும் போது, துன்ப நீக்கத்திற்கும் இன்ப ஆக்கத்திற்கும் காரணமாய் அமைகின்றது. உலகியல் அடிமையை ஒழித்து, இறைவனுக்கு அடிமைப் பட்டோர் எல்லையில்லா இன்பமும் சிறப்பும் எய்துவர். ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. துன்பத்திற்கும் இழிவுக்கும் காரணமாக அமைகின்ற அடிமைத் தன்மையையே, இன்பத்திற்கும் பெருமைக்கும் காரணமாக மாற்றி அமைத்து நலம் புரிபவன் ஆதலின், இறைவனை இனியவன் என்கின்ருர் திருநாவுக்கரசர். ஏனைய நம் போலும் மனிதர்களுக்குச் செய்யும் அடிமை போல இழிவுடையதாகாமல், இறைவனுக்குச் செய்யும் 'அடிமை சால அழகுடைத்தே' என்பதில் ஐயமில்லை. ''அல்லல் என்செயும்? அருவினை என்செயும்? தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்? தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனுர்க்கு எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே'' என்பது திருநாவுக்கரசர் பெருமிதவுரை.

(2) உலகத்தில் அடிமை கொள்ளுபவர் அனைவரும், அவ்வடிமைகளால் தமக்கு விளையும் பலதிற நலங்களையும் வசதிகளையும் எண்ணியே, அடிமைகளை அமர்த்திக் கொள்வர். இதுதான் உலகியல் தலைவர்களின் இயல்பு. ஆனுல் குறைவிலா நிறைவினன் ஆக விளங்கும் இறைவனுகிய அருளியல் தலைவனே, அடியவர்களால் தனக்கு ஏதேனும் வசதியும் நலமும் விளையும் என்று எதிர்பார்க்கின்றிலன். தன்னை அடைந்தவர்களுக்குத் தான் இன்பம் தருதலை விரும்பியே அவன் அடியவர்களை ஆட்கொள்கின்ருன். ''தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்'', ''சங்கரனுர் தம்மைப் போலத் தம் அடியவர்கட்கும் இன்பம் அளிப்பவர்'' என்பது சம்பந்தர் தேவாரம். ''இன்பமே என்னுடைய அன்பே'' என்பர் மணிவாசகர்.

---

* "In the study of a Tamil poem it is necessary to understand not only what the poets say directly, but also what they subtly imply, and what they wish the hearer to understand as implied.''

—Xavier S. Thaninayagam

(3) உலகியல் தலைவர்கள் தமக்கு அடிமை செய்ய, அனைவரையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒருசிலரை மட்டுமே மிகவும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு, மற்றவர்களை நீக்கி விடுவர். ஆனால் இறைவனே தன்னை அடைந்தவர்கள் அனைவரையுமே விரும்பி ஆட்கொண்டு அருள்புரிகின்றான். "ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ளவல்ல நம் ஈசனார்" என்பது, திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம். தன்னை அடையாதவர்களுக்கும் அருள் செய்தலை விரும்பி, அவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றான் இறைவன். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள்நல்கிச் சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தை செய்ய வல்லான்'' என்பது தேவாரம்.

(4) உலகத்துத் தலைவர்கள் தமக்குப் பணி செய்தற்குரிய அடிமைகளைத் தேர்ந்தெடுக்குங்கால், மிக்க தகுதியும் திறமையும் உடையவர்களை மட்டுமே, தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்வர். ஆனால் இறைவனாகிய தலைவனே அங்ஙனம் இன்றி, மிகமிகத் தகுதி குறைந்தவர்களையும், ஒரு தகுதியும் இல்லாதவர்களையும், தானே தன் அருளால் விரும்பி வந்து ஆட்கொள்ளுகின்றான். "நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்". ''யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்'', "என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்'' ''வான் பழித்து இம்மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்", ''பொற்றவிசு நாய்க்கு இடுமாறு அன்றே நின் பொன்னருளே'' என்றெல்லாம் மணிவாசகர் அருளிச் செய்திருத்தலைக் காணலாம்.

(5) உலகத்திலுள்ள தலைவர்கள், தாம் தமக்கு ஊழியம் செய்தற்கு அமர்த்திக் கொள்ளும் பணியாளர்களுக்கு, அவர்கள் விரும்பும் அளவு ஊதியம் தர உடன்படார். பணியாளர்கள் விரும்பும் ஊதியத்திலும் சிறிது குறைவாகவே கொடுப்பர். குறைந்த ஊதியத்தில் நிறைந்த பல வேலைகளை வாங்கிக் கொள்ள விரும்புவதே, உலகத்தில் எசமானர்களின் இயல்பு! ஆனால் இறைவனாகிய எசமானனே, தனக்கு ஊழியம் செய்யும் அடியவர்கள் வேண்டுவன எல்லாம் தருவான்; அவர்களின் ஆசை தீரும்படி அவர்கள் கேட்பதனைக் காட்டிலும் கூட, மிக அதிகமாகக் கொடுப்பான். ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்பது அப்பர் தேவாரம். ''வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்டமுழுதும் தருவோய் நீ'' என்பது மணிமொழியாரின் திருவாசகம். ''ஆசை தீரக்கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்'' என்பது திருஞானசம்பந்தர் திருமொழி.

(6) உலகத்துத் தலைவர்கள், தமக்குரிய ஊழியர்களை அமைத்துக் கொண்டால், அவர்களுக்கு இடையே நிலவும் உறவு, தலைவர் என்னும் உறவு ஒன்றேயாகும். ஆனால் இறைவன் தன் அடியவர்களுக்கு வெறும் தலைவனாக மட்டுமில்லாமல், தந்தையாகவும் தாயாகவும் நண்பனாகவும் குருவாகவும் மற்றும் எல்லா உறவுமாகவும் அமைந்து நலம் புரிகின்றான். ''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்'' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ''தாயும் நீயே தந்தை நீயே'' என்பர் சம்பந்தர். ''நண்பா! என் உயிர் நாதா!'' ''எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம்'' என்பன திருவாசகம். 'தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த' என்பது சிவஞானபோதம்.

(7) உலகத்துத் தலைவர்களில் பெரும்பாலோர் தம் ஊழியர்களின்பால் போதிய அன்புகாட்ட மாட்டார்கள். அவர்களிடம் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள். தம் ஊழியர்களைக் கடுமையாகவும், கொடுமையாகவும் நடத்துதல் பலரிடம் காணப்படும் பொதுவான இயல்பு. ஆனால் இறைவனாகிய தலைவனே அத்தகையவன் அல்லன். அவன் அடியார்களுக்கு மிகவும் நல்லவன். அடியவர்களிடம் அன்பும் பரிவும் அருளும் காட்டுபவன். ''கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே'' என்பது சம்பந்தர் தேவாரம்.

(8) உலகத்துத் தலைவர்களில் பலர், தம் ஊழியர்கள் தம்மை அணுகமுடியாதபடி அரியராக இருப்பர். அத்தகையவர்களை நினைக்கும் போதெல்லாம், ஊழியர்களுக்கு அச்சமே மிகுதியும் ஏற்படுவதுண்டு. ஆனால் இறைவனே

கிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியவர்களுக்கு மிகமிக எளியவன். ''அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன்'' என்று தன்னைத்தானே அவன் சுட்டிக்கொள்வதாக ஒரு தனிப்பாடலும் உண்டு. அடியவர்களின் அச்சத்தைப் போக்கி ஆட்கொண்டு அருளு வான். "அச்சம தீர்த்து ஆட்கொண்டான், அமு தம் ஊறி அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர'' என்பர் மணிவாசகர்.

(9) உலகத்துத் தலைவர்கள் பலரிடத்தில், ஊழியம் செய்வது மிக மிகக் கடினமாக இருக் கும். தமது ஊழியர்களைப் பலவகைகளில் அலைக் கழித்து, இடையறுது கடினமான வேலைகளைத் தொடர்ந்து செய்யும்படி, ஏவிக்கொண்டே யிருப்பர் சிலர். ஆனால் இறைவனாகிய தலை வனோ, தன் ஊழியர்களுக்கு எவ்வித கடின மான வேலைகளையும் அளிப்பதில்லை. தனது அடியவர்கள் எவ்வகையான வேலையையும் செய்யவேண்டாம் என்றே, அவன் பணித்தருள் கின்றான்.

சமயத்துறையில், அருளியல் வாழ்வில், ''சும்மா இருத்தல்''*என்பது ஒரு சிறந்த பெரும் பேறு. ''இன்று வருமோ? நாளைக்கே வருமோ? மற்று என்று வருமோ? சும்மா இருக்கும் சுகம்'' என்று ஏங்கி இரங்குகின்றார் இராமலிங் கர். ''சும்மாஇரு'' என்பதே, முருகன் அருண கிரிநாதருக்குச் செய்த அருளியல் உபதேசம். அதன் அருமை பெருமைகளைப் பாராட்டிச் ''சும்மாஇரு சொல்லற என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே'' என்று, அருணகிரிநாதர் தமது கந்தர் அநுபூதியில் வியந்து கசிந்து உருகுகின்றார். அருணகிரிநாத ரின் இத்திரு மொழியில் மிகவும் ஆழ்ந்து ஈடு பட்டு, ''அருணகிரிநாதர் அநுபவம் நாயேற்குக் கருணை பொழி போரூரா காட்டு'' என்கின்றார் சிதம்பர சுவாமிகள்.

மாணிக்கவாசகர் ''என்னுடைய செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட் டாமோ'' என்கின்றார். திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், ''செய்தற்குஅரிய செயல் பலவும் செய்து சிலர், எய்தற்கு அரியதனை எய்து கின்றார்; ஐயோ! நாம் செய்யாமை செய்து செயலறுக்கலாய் இருக்கச் செய்யாமை செய் யாதவாறு'' என்று சிந்தை நொந்து உரைக் கின்றார். உலகத்திலுள்ள தலைவர்கள் வற் புறுத்திப் பற்பல வேலைகளை வாங்குபவர்களாக இருக்க, இறைவனாகிய தலைவனோ தன் அடிய வர்களைச் ''சும்மாஇருங்கள்'' என்று சொல்லி வற்புறுத்துகின்றான் எனின், அவனை இனியன் என்பதில் இழுக்கொன்றும் உண்டோ?

(10) உலகத்தில் தலைவர்கள் தங்களுக்குப் பலதிறப் பணிவிடைகளைச் செய்வதற்கென்றே, ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது வழக்கம். ஆனால் இறைவனோ தன் தொண்டர்களைச் ''சும்மா இரு'' எனச் சொல்வது மட்டும் அன்றி, அவர்களுக்குத் தானே வலிந்து வந்து பல திறப்பணிகளைச் செய்து மகிழ்கின்றான். கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூது போனான்; பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து பணியாற்றினான். சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பிச்சை எடுத்துழன்றதும், பரவை யார்பால் தூது சென்றதும், பாணபத்திரர்க் காக விறகு சுமந்ததும், வந்தியம்மைக்குக் கூலியாளாய் வந்து மண்சுமந்து பிரம்படிபட்டுப் புண்சுமந்ததும் போன்ற வரலாறுகள், இனியன் இறைவன் என்பதனை இனிது அறிவிக்கும் சான்றுகள் ஆகும்.

(11) எசமானர்களின் மூட்டை முடிச் சுகள் ஆகிய பாரங்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு உடன் செல்லுதல், உலகத்து வேலைக்

"There is a stage in life when a man does not need even to proclaim his thoughts, much less to show them by outward action. Mere thoughts act. They attain that power. Then it can be said of him that his seeming inaction constitutes his action. I must confess tha I am far from that state. All I can say is that my striving is in that direction."

—Mahatma Gandhiji

காரர்களுக்குரிய இயல்பு. ஆனால் இறைவனோ ''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே!. நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுடைய பாரத்தைச் சுமந்து கொண்டு உங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றேன்.'' என்று, தன் அடியவர்களின் பாரங்கள் பலவற்றையும் தானே வலிந்து வந்து ஈர்த்து ஏற்றுச் சுமந்து கொள்கின்றான். ''தமக்கு அன்புபட்டவர் பாரமும் பூண்பர், ஆரூர் அரநெறியாரே'' என்பர் திருநாவுக்கரசர். சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவமும், இறைவனுக்கு "எடுத்துச் சுமப்பான்" (Porter) என்னும் ஒரு பெயரைப் புதிது படைத்துத் தமது திருவருட்பயன் என்னும் நூலில் வழங்கியிருத்தல் காணலாம். 'செம்மலர் நோன்தாள்' 'மதனுடை நோன்தாள்' என்னும் ஆன்றோர் அருந்தொடர்களும், இவ்வுண்மையினை வலியுறுத்தும்.

(12) ஒரு சில எசமானர்கள், தம்கீழ்ப் பணியாற்றும் வேலைக்காரர்கள் செய்யும் செயல்களில், எப்போதும் குற்றம் குறைகளையே கண்டுபிடித்துச் சுட்டிக்காட்டிச் சீறிச் சினந்து வைது பழிப்பர்; கடுந்தண்டனைகளும் கொடுப்பர். ஒரு சிலர், பணியாட்கள் நல்லதே செய்தாலும் கூட, குற்றமாகவே பிறழ உணர்ந்து வெகுள்வர். இறைவனோ தன் அடியவர்களின் குற்றங் குறைகளைக் குறிக்கொண்டு நோக்க மாட்டான். கண்டும் காணாததுபோற் பெருந் தன்மையாக இருந்துவிடுவான். அடியவர்கள் செய்யும் பிழைகளுக்காக அவர்களுக்குத் தீங்கு எதுவும் செய்யமாட்டான். அன்பர்கள் செய்யும் பிழைகளை மறப்பதிலும், மன்னித்துப் பொறுமை காட்டுவதிலும், இறைவனுக்கு இணையாவார் இலர். ''குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே'' என்பது சம்பந்தர் தேவாரம். ''ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித் தீது புரியாத தெய்வம்'' என்று போற்றுவர் சிதம்பர சுவாமிகள்.

(13) ஊழியர்கள் ஒரோவழி அறியாமையினால் சிறு சிறு குற்றங்களைச் செய்தாலும், அதற்காகச் சீறிவிழுந்து பெருந்தண்டனைகளை அளிப்பது உலகத்தவர் இயல்பு. ஆனால் இறைவனோ பெரும்பெருந் தவறுகளைச் செய்த போதிலும், தன் அடியவர்கள்பாற் சீறிவிழுவதில்லை. கண்ணப்பர் செருப்பு அணிந்த காலால் இறைவனின் திருமுடிக்கண் இருந்த மலர்களை விலக்கினார்; எச்சில் நீரை இறைவனின் திருமேனியின் மீது உமிழ்ந்தார்; இழிந்த ஊன் உணவைக் கொணர்ந்து படைத்தார். சாக்கிய நாயனார் நாள்தோறும் மறவாது கல்லால் எறிந்தார். ஆயினும் இறைவன் சீறிவிழாமல் அவைகளையெல்லாம் மிகவும் உவந்து ஏற்றுக் கொண்டருளினான். ''ஆறாத ஆனந்தத்து அடியார் செய்யும் அனாசாரம் பொறுத்தருளி, அவர் மேல் என்றும் சீறாத பெருமான்'' என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். ''சீ, ஏதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும் தாயான ஈசன்'' என்பது திருவாசகம். இத்தகைய நல்லியல்பு கொண்ட இறைவனை இனியன் என்பதற்குத் தடையென்னை?

(14) ஊழியர்பாற் குற்றங் கண்டால் கடிந்து தடிவது, எசமானர்களின் இயல்பு. தமது ஊழியர்கள் தவறு செய்யின், உலகத்து எசமானர்களுள், தலையாயினார் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக் கெடுத்தலும் செய்யக் காண்கின்றோம் (கோவையார், 25). இம் மூவகையும் செய்யாது இரங்கிக் காத்தருள்பவன் இறைவன். பசு தனது கன்றின் உடம்பின் மீது உள்ள வழும்பையும் விரும்பியுண்ணும். அதுபோல இறைவன் அடியவர்களின் குற்றங்களையும் குணம் எனக்கொள்கின்றான். அதனாலேயே இறைவனுக்குப் பக்தவத்சலன் என்பது பெயர் ஆயிற்று.

அடியார்கள் செய்யும் பிழைகளையெல்லாம் இறைவன் பொறுத்தருள்கின்றான். "பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே; இத்தனையும் எம்பரமோ? ஐய ஐயோ! எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே'' எனத் திருநாவுக்கரசர் மனம் உருகிப் பாடுதல் காணலாம். ''குற்றம் செயினும் குணம் எனக் கொள்

ளும் கொள்கை கண்டு நின் குரைகழல் அடைந்தேன்'' என்று சுந்தரரும் பாடியிருக்கின்ருர். இவைகள் அனைத்தும் இறைவன் இனியன் ஆதலைத் தெள்ளிதின் உணர்த்துகின்றன அல்லவா ?

உலகத்துத் தலைவர்களின் மனமும் குணமும் அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கும்; அவர்கள் காட்டும் அன்பு எப்போதும் ஒரே நிலையில் இராது. ''காலையில் ஒன்ருவர்; கடும் பகலில் ஒன்ருவர்; மாலையில் ஒன்ருவர் மனிதரெல்லாம்'' என்று ஒரு தனிப்பாடல் கூறுவதுபோல, அடிக்கடி உலகியல் தலைவர்களின் மனமும் குணமும் மாறி மாறி வேறுபட்டுக் கொண்டே இருக்கும். ஆனல் அருளியல் தலைவனுகிய இறைவனே அத்தகையவன் அல்லன். அவன் என்றும் மாருத நிலைபேருன இயல்புகள் உடையவன். தன் அடியவர்களிடம் அவன் எப்போதும் இனியவனுகவே விளங்குவான். இதனை நமது திருநாவுக்கரசர் ''**எப்போதும் இனியானை** என் மனத்தே வைத்தேனே'' என்று தமது கச்சித் திருவேகம்பம் பற்றிய தேவாரப்பாடலிற் குறித்திருத்தல் காணலாம்.

(15) இறைவன் தன் அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்தருள்கின்ருன்; அவர்களின் குற்றங்களையும் குணமெனக் கருதும் கொள்கை உடையவனுக இருக்கின்ருன், என்பது உண்மையே யாயினும், அதுபற்றி நாம் குற்றங்களையும் பாவங்களையும் புரிந்துகொண்டே இருக்கலாம் என்பது இங்குக் கருத்தன்று. குற்றங்களை நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவது இறைவனின் பெருங் கருணைக்குரிய இயல்பான பெற்றிமையேயாம். எனினும், ஒரோவழி அவன் மிகக் கடுமையாகத்தண்டிக்கவும் முற்படுவது உண்டு.

அவனுக்குச் சீற்றம் ஏற்படுமாயின், ''**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்**'' என்றபடி, அது மிகப் பயங்கரமான விளைவுகளையும் நிகழ்த்துவிக்கும். பிழை செய்யும் அடியவர்களை ஒரோவழி அவன் கடுமையாக ஒறுக்கவும் தயங்குவதில்லை. ''நின்பணி பிழைக்கில் **புளியம்வளாரால் மோதுவிப்பாய்**'' என்று, நம் திருநாவுக்கரசர், தாமே நன்கு இனிது அனுபவித்து உணர்ந்து பாடியிருத்தல், நம்மனோர் நினைவிற் பதிக்கற்பாற்று. சங்கிலியார்க்குச் **சுந்தரர்** செய்து அளித்த சூளுறவு பொய்த்தபோது, தாமே விரும்பி ஏற்ற தனிப்பெரும் நண்பர் என்றும் கருதாது, அந்தச் சுந்தரரின் கண்களைச் சிவபெருமான் ஒளி இழக்கச்செய்து அலைக் கழித்த செய்தியும், இங்கு நாம் மனம் கொளத் தக்கது.

இங்ஙனம், ஒரோவழி இறைவன் தன் அடியவர்களை அவர்கள் புரியும் பிழைக்காக உரிய தண்டனையை அளித்து ஒறுப்பதுபற்றி, அவனைக் கடியன் அல்லது கொடியன் என்று நாம் கொண்டுவிடுதல் ஆகாது. இறைவனின் தண்டனையும்கூட, ஒருவகையில் நமக்கு இனிமை பயப்பதேயாகும். அது நம்மைத் திருத்தி ஆட்கொள்ளும் சிறந்த கருணைத் திறமேயாகும். இறைவனின் தண்டனை கொடியதன்று. நமக்கு இனியதேயாகும். அதுபற்றியே மணிவாசகர் ''உடையாய் கூவிப் பணிகொள்ளாது **ஒறுத்தால் ஒன்றும் போதுமே**'' என்று அருளிச் செய்கின்ருர். ''நயனங்கள் மூன்றுடைய நாயகனே **தண்டித்தால் சயம்** அன்ருே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ'' என்றும், ''தலை தக்கனையும் எச்சனையும் **தூய்மைகள் செய்தவா**, தோள்நோக்கம் ஆடாமோ'' என்றும், திருவாசகத்தில் பிற இடங்களிலும் வந்திருத்தல் சிந்திக்கற் பாலது.

தந்தை தன் அருமந்த மைந்தனைத் தண்டித்துத் திருத்துதல் போலவும், சிறந்த மருத்துவர் ஒருவர் பிணியாளனுக்குக் கத்திகொண்டு அறுவை செய்து நோயைத் தீர்த்தல்போலவும். நமக்கு நன்மை செய்தற்பொருட்டே, இறைவன் அவ்வப்போது அருளால் நமக்குத்தண்டனை அளிக்கின்ருன். இதனை **மறக்கருணை** என்று சாத்திரங்கள் சாற்றும், ''நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது'' என்பது சிவஞானசித்தியார் (65—66). இவ்வாற்ருல் பிழைகளைப் பொறுப்பதனுலும், பிழைகளுக்காக ஒறுப்பதனுலும். இறைவன் எவ்வ...

யாலும் இனியனே ஆதலே, அருளாளர்கள் அனை வரும் ஒருமுகமாகவும், ஒரு குரலாகவும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

(16) இறைவன் தன் அடியவர்கள் துன்புற்றால் அதுகண்டு சிறிதும் உளம் தரிக்கமாட்டான்; அடியவர்களின் துன்பத்தைப் போக்கியல்லது தான் அமைதி பெறமாட்டான், அவர்கள் இருக்கும் இடத்தைத் தான் தேடிச் செல்வான். அவர்கள் கூப்பிட்ட குரலுக்குத் தான் விரைந்து ஓடோடிச் சென்று, அவர்களின் உள்ளம் உவக்கும்படி தானே பலதிறப் பணிகள் புரிவான். அவர்களின் கருத்தறிந்து முடிப்பான். வேண்டிய வரங்கள் எல்லாம் தருவான். அரியன பல செய்தும் அவர்கள் விரும்புவன வற்றை நிறைவேற்றுதலும், முன்பு இல்லாத வற்றையும் அவர்களுக்கு உண்டாக்கிக் கொடுத்தலும் பிறவும், இறைவனது இனிய தன்மைகள் ஆகும்.

மருதவாணப் பெருமான் உயிர்களின் அருட்பசிக்குச் சுவைமிக்க உணவாகவும், ஆன்ம தாகத்திற்கு இனிய தண்ணீராகவும், பிறவித் துன்ப வெம்மைக்குக் குளிர்ந்த நிழலாகவும் விளங்கி யருள்புரிந்து வருதலே, இத்தலத்திற் பலகாலம் இருந்து வழிபட்டு அருள்பெற்ற சான்றோர் ஆகிய பட்டினத்தடிகள், தமது திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் விளக்கியிருத்தல், இங்கு நாம் சிந்தித்து உணர்ந்து இன்புறத் தக்கது. இவை போல்வன வற்றையெல்லாம் நுண்ணிதின் எண்ணுந்தோறும், இறைவன் அடியவர்களுக்கு இனியனாக இருத்தலை யுணர்ந்து, நம் உள்ளம் இறும்பூது எய்திக் களி துளும்பும்.

முடிவுரை :

இடைமருதன் இனியன்; அவனை வழிபாட்டால், பொருளும் குலனும் புகழும் திறனும் அழகும் அறிவும் அனைத்தும் வரும்: எனத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையிற் **பட்டினத்தடிகள்** நமக்கு அறிவுறுத்துகின்றார். திருக்குடமுழுக்கு விழா நிகழ இருக்கும் இப் புண்ணிய நன்னாளில், நாம் அனைவரும் இனியன் ஆகிய இடைமருதூர்ப் பெருமானை, அன்புடன் பணிந்து வணங்கி உய்வோமாக !

இம்பரிற் சிறந்த இணையிலாத் தலமாம்
எழில்திரு விடைமரு தூர்க்கண்,
நம்பெருந் தலைவன் மகாலிங்கப் பெருமான்
நலந்திகழ் குடமுழுக்கு அதனில்,
அம்பல வாண தேசிக பரமா
சாரிய சுவாமிகள் அருளால்,
எம்பிரான் "இனியன்" எனும் அப்பர் பாடல்
ஏற்றுச்செய் சொற்பொழிவு இதுவே.

—ந. ரா. முருகவேள்

ஆசாரக்கோவை

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.)

(முற்றெடர்ச்சி)

நாட்கடமைகள் :

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது விதி. என்றாலும். அட்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி, முதலிய நாட்களிலும், அரசனுக்குத் தீங்கு நேரும் நாட்களிலும், பூகம்பம் இடிமுழக்கம் தூய்மையின்மை முதலியன நேரும் நாட்களிலும், நாம் நூல்களை ஓதுதல் கூடாது.

திருமணநாள், கடவுளர் திருவிழா நாள், பிதிரர்களுக்கு வழிபாடு செய்யும் நாள், வேள்விகள் செய்யும் நாள் ஆகிய இவ் ஐந்திலும் பல வகை அறங்களைச் செய்தலும், விருந்தினர்களுக்கும், ஏழைகளுக்கும் உணவு அளித்தலும் நலம் பயக்கும்.

செய்யத்தகாதன :

அறிவுடையவர்கள் யாரையும் பழித்துரைக்க மாட்டார்கள்; இகழ்ந்து ஏளனமாகப் பேச மாட்டார்கள் ; பலர் நடுவில் உறங்கமாட்டார்கள். தம்மால் இயலாதவற்றைத் தருவதாகவோ, செய்வதாகவோ, சொல்லிப் பின்னர் ஏமாற்ற மாட்டார்கள். ஏழைகளை மனம் நோகும்படி இழித்துக் கூறமாட்டார்கள். வஞ்சனைச் சொற்கள், நயமில்லாத சொற்கள், வாய்க்குவரும் சொற்கள், பிறரைப் பழிக்கும் சொற்கள், புறம் கூறும் சொற்கள் ஆகிய வற்றை, ஒழுக்கமுடையவர்கள் ஒருபோதும் கூறமாட்டார்கள்.

தமது உடல்நலத்தைப் போற்றிப் பாதுகாத்துக்கொள்ள விரும்புபவர்கள், மின்னலின் ஒளியையும், விண்மீனின் வீழ்ச்சியையும், விலைமகளின் ஒப்பனையையும், காலை மாலைகளின் வெயிலையும், உற்று நோக்க மாட்டார்கள்.

ஒரு பொருளை வீசி எறிதல், கல் எறிதல், வெறுக்கத்தக்க முற்கு வீளை முதலிய ஒலிகளைச் செய்தல், பிறரைக் கைதட்டிக் கூவி அழைத்தல், பிறரைப் போல நடித்து நையாண்டி (விகிர்தம்) செய்தல், பிறர்பால் சினந்து சிடுசிடுத்தல், ஒளித்துச் செய்தல் முதலியவற்றைப் பண்பாடுடையவர்கள் செய்தல் கூடாது.

போர் நிகழும் இடம், கள்குடிக்கும் இடம், விலைமகளிர் வாழும் இடம், நண்பர்கள் கொள்கையும் பண்பும் இழக்குமிடம், பல திற மக்கள் கூடும் தண்ணீர்த் துறை போன்ற இடங்களில், அறிவுடையவர்கள் நெடும் நேரம் நிற்க மாட்டார்கள்.

தம் உடலுக்கு நோயின்மையை விரும்புபவர்கள், பாழான வீடு, கோயில், சுடுகாடு, ஊருக்குப் புறம்பே தனித்துள்ள முதுமரம்

என்பவற்றின்பால், துணையுடன் அன்றித் தனியே செல்லமாட்டார்கள். பகலில் உறக்கம் கொள்ள மாட்டார்கள்.

ஒருவர் புறப்பட்டுச் செல்லும்போது பின்னே நின்று கூவி அழைத்தல், தும்முதல், எங்கே செல்கின்றீர் என வினவுதல், ஒருவருக்கு நேர் எதிரே சென்று மிக நெருங்கிப் பேசுதல், முதலியன செய்தல் கூடாது. பெரியவர்களின் பக்கத்திற் சற்று விலகியிருந்து பணிவு தோன்றப் பேசுதல், பெரியவர்களைப் பணிந்து வலம் செய்து செல்லுதல் முதலியன, பண்பாடு உடையவர்களின் செயலாகும்.

ஒருவர் உடம்பைப் பார்த்து நன்றாய் இருக்கிறதென்று (அல்லது உடல் நன்றாய் இல்லையே என்று) சொல்லுதலும், விளக்கின் அருகில் சென்று வாயால் ஊதி அணைத்தலும், சமையலறையிலுள்ள அடுப்பின்கண் நெருப்பு அவிந்து போகும்படி எடுத்தலும், உடம்பிற்படும் வகையில் நெருப்பிற்கு மிக நெருங்கி இருந்து குளிர் காய்தலும் கூடாது. தம்மைவிடப் பெரியவர்களுடன் செல்லும் போது, தாம் மட்டும் வாகனம் ஏறிச் செல்லுதலும், காலில் செருப்பணிந்து குடைபிடித்துச் செல்லுதலும் முறையன்று. தாய், புதல்வி, சகோதரி முதலிய உறவு உரிமை உடையவர்களாயினும், பெண்கள் இருக்குமிடத்தில் கூடிய வரையில் ஒருவன் தனித்துச் சென்று பழகாமல் இருப்பது நல்லது.

அரசன் அல்லது தலைவன் செய்யும் செயல்களில் வெறுப்புக்காட்டிக் கொள்ளுதல், அவரொடு கருத்து வேறுபட்டுக் கலகம் செய்தல், சிறிது ஒதுங்கி மதிப்பாக நில்லாமல் அவர்கள் முகத்திற்கு எதிரே நிற்றல்; அரசன் தனியே இருக்கும்போது தம்முடைய செயல்களையும் செய்திகளையுமே பேசிக் கொண்டிருத்தல், முதலியன குற்றங்களாகும். அரசன், 'காக்கை வெண்ணிறமுடையது' என்றாலும், அன்று என்று மறுத்துக் கூறாமல், ஆம்! ஆம்!! என்று உடன்பட்டு நிற்றல், ஒருவகையில் நலம் பயப்பதே யாகும்.

அரசர் முதலியவர்கள் முன்னிலையில் எச்சில் உமிழ்தல், உயர்ந்த இடத்தில் ஏறியிருத்தல், வெற்றிலை போடுதல், தகுதியற்ற சொற்களைக் கூறுதல், உறக்கம் கொள்ளுதல் முதலியன செய்தலாகாது. அரசரின் முன்னிலையில் தம்முடைய செல்வம் கல்வி புகழ் செயல் திறம் முதலியன பற்றி, மிகுதியாகப் பலமுறை புகழ்ந்து சொல்லிக் கொள்ளுதல் கூடாது. அரசனின் அரண்மனையிலும் தெய்வத் திருக்கோயில்களிலும், பிறர் எவரையும் வணங்குதல் முறையாகாது.

பெரியவர்கள் இருக்கும் இடத்தில் ஆடையைக் களைதல், காலைச் சொரிதல், கைகளை ஆட்டிப் பேசுதல், பெண்களை உற்று நோக்குதல், மறைவான செய்திகளைப் பேசிக் கொள்ளுதல், ஆகியவற்றைச் செய்தல் கூடாது.

நல்ல குலமகளிர் தம்முடைய கணவரின் உருவத்தை அன்றி, மற்றவர்களின் உருவத்தைக் கூர்ந்து உற்றுநோக்குதல் கூடாது. தம் உடல் அமைப்பைப் பலர் முன்னிலையில் பலகால் பார்த்துக் கொள்ளுதல், பலர் நடுவில் தலை மயிரைக் கோதுதல், கைந்நொடித்தல் முதலியன செய்தல் முறையன்று. ஒருவரின் வீட்டிற்குப் புழைக்கடை வழியால் நுழைதல், பிறர் தம்முடைய மனைவியரோடு தனித்து இருக்குமிடத்துப் புகுதல், விலை மகளிர் இருக்குமிடத்தில் தாம் குடியிருப்புக் கொள்ளுதல் முதலியன, தீங்கு பயக்கும் செயல்களாகும்.

பொது வழிகளை அடைத்துக்கொண்டு பக்க வரிசையில் திரளாகச் செல்லுதல், ஒருவருடைய நிழலை மிதித்துக்கொண்டு நிற்றல், பேசுவதற்கு முன்னரே எதனையும் ஆராய்ந்து வைத்துக்கொள்ளாமல் பேசும்போதுசிந்தித்துக் கொள்ளலாம் என்று இருத்தல், ஊர்ப் பொது மக்கள் பலரும் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தல், அரசனின் படை வலிமை பற்றிய செய்திகளைப் பற்றிப் பகைவர்க்கு உளவு கூறுதல், முதலியன கூடாது.

புற்றில் வாழும் பாம்பு, அரசர், நெருப்பு, குகையில் வாழும் சிங்கம் என்னும் நான்கையும்,

இளமையானவை, எளிமையானவை, பழக்கப் பட்டவை என்று எண்ணி, அசட்டையாக நடந்து கொள்ளுதல் துன்பத்தை விளைவிக்கும். எவ்வளவு செல்வம் பெருகினுலும், அறச் செயல்களையும், திருமணம் முதலிய நிகழ்ச்சி களையும், ஒரு செயலைச் செய்து முடிக்கும் முயற்சிகளையும், வீடு கட்டுதலையும், அவ்வப் பகுதி அரசர் அல்லது தலைவர்கள் செய்யும் அளவிற்கு மேற்படச் செய்யாதிருத்தல் நல்லது. செய்யின், அஃது அவர்களை அழுக்காறு அடை வித்து, அவர்களால் நமக்குத் துன்பத்தை உண் டாக்கும்.

தாம் ஒருவர்க்குச் செய்த நன்றியின் பயனைத் தாமே எடுத்துச் சொல்லுதல், தமக்கு ஒருவர் இட்ட உணவை இகழ்ந்து உரைத்தல், தம்முடைய அறத்தையும் விரதத்தையும் தாமே தற்புகழ்ச்சி செய்து கொள்ளுதல், தம்மைத் தாமே பெரியவர்களாக மதித்துக்கொண்டு தருக்குற்று ஒழுகுதல் முதலியன, கூடாது. தமக்குக் கிடைத்தற்கு அரியனவற்றை விரும்பு தல், தம்மால் இழக்கப்பட்டனவற்றை நினைத்து நினைத்து வருந்துதல், விலக்கிக்கொள்ள முடி யாத துன்பங்கள் ஒரோ வழி நேர்ந்தால் மனம் கலங்கிச் சோர்ந்து விடுதல், முதலிய செயல்கள் முறையல்ல.

பெரியோர்கள் முன்னிலையில், ஒருவரைக் கையினுல் சுட்டிக்காட்டிப் பேசுதல்; காலால் எழுதிக் காட்டுதல்; அறிவு ஒழுக்கங்கள் இல் லாத ஒருவரை, அவற்றை உடையவர்க்கு ஒப்பாகச் சொல்லி விவாதித்தல்; பெரியோர் கள் கொடுப்பதை உட்கார்ந்து கொண்டே வாங்குதல்; முதலியன குற்றமான செயல் களாகும்.

தன் உடலையும், தன் மனைவியையும், தன் னிடத்தில் ஒருவன் அடைக்கலமாக ஒப் படைத்த பொருளையும், தன் உயிர்க்கு உதவி யாக எண்ணித் தான் சேர்த்து வைத்திருந்த பொருளையும், ஒருவன் பொன்னைப்போலப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும். இல்லை யேல் பின்னர்ப் பெருந்துன்பம் உண்டாகும்.

செய்யத்தக்கன :

மக்கள் தம்முடைய வாழ்க்கையில் தத்தம் தகுதி அறிந்து நடந்து கொள்ளுதல் வேண்டும். உடுத்தல், நடத்தல், சொல் தவறுதல், வைதல், ஆகிய இந்நான்கிலும் தங்கள் தங்களுடைய பதவி, படிப்பு, ஆற்றல், குடிப் பிறப்பு என்ப வற்றிற்கு ஏற்ப, நடந்து கொள்ளுதல் முறைமையாகும்.

தங்கள்பால் வரும் நண்பர், விருந்தினர் உறவினர் ஆகியோர்பால் புன்முறுவல் பூத்தல், இனியமொழி பேசுதல், கால் கழுவ நீர் அளித் தல், இருக்கை அளித்தல், படுத்தற்குப் பாய் அளித்தல், தங்குதற்கு இடம் கொடுத்து வசதி செய்தல் ஆகியவற்றை, ஒவ்வொருவரும் செய் தல் கடமையாகும்.

கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங் கும் பெரியவர்களை, வணக்கத்திற்கு உரியவ ராய்க் கருதி வணங்கிப் போற்றுதல் வேண்டும். பெரியவர்களின் திருவடிகளைத் தொழுதலும், அவர்களைக் கண்டவிடத்து எழுந்திருத்தலும், அவர்கள் அமர்க என்று சொல்லும் வரையில் நின்றிருத்தலும், நல்லொழுக்கமாகும். துறவி களைப் போற்றுதலும், பழி பாவங்களுக்கு அஞ்சு தலும், தான் கற்ற கல்வித் திறத்தை அகந்தை தோன்றும்படி பெரியோர்கள் முன்னிலையில் காட்டிக் கொள்ளாமலிருப்பதும், நல்ல நெறி யாகும். பண்பில் சிறந்த பெரியவர்கள், தவ முனிவர்கள், சுமை தூக்கி வருபவர்கள், நோயாளிகள், பெரியவர்கள், சிறுபிள்ளைகள், பசுக்கள், பெண்கள் ஆகிய இவர்களுக்கு ஒதுங்கி நின்று வழி கொடுத்து உதவுபவர்கள், சிறந்த பண்புடையவர்களாக மதிக்கப் பெறுவார்கள்.

அரசர் அல்லது அரச அலுவலரது, அலு வலக வாயிலின்கண் உள்ளே செல்லாதபடி, காவலர்கள் தடுத்து நிறுத்தினுல் வெகுண்டு

வருந்தாது இருத்தல்; அரசர் அல்லது தலைவர் போன்றவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகி, அதனால் அவர்கள் காட்டும் பரிவினைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளாதிருத்தல்; அவர்கள் ஏதேனும் ஒன்றைத் தரும்போதும், தம்மிடம் தலையளி செய்யும் போதும், இன்னும் மிகுதியாகச் செய்யவில்லையே என்று தம் நிலையை மறந்து குறைபட்டுக் கொள்ளாதிருத்தல்; தமது அசரர் அல்லது தலைவருக்குச் சமமான நிலையில் ஆடை அணிகள் தரித்துக் கொள்ளாமலிருத்தல்; பெரியோர்கள் கூடியுள்ள அவைக்களத்தில் நடுவே புகுந்து ஊடறுத்துச் செல்லாதிருத்தல் முதலியன, சிறந்த பண்பாடுகளாகும். பெரியோர் விரும்புவனவற்றைத் தாம் பெற விரும்புதலும், கீழ் மக்களைத் தம் வீட்டிற்கு உள்ளே அழைத்துக்கொண்டு செல்லுதலும் கூடாது. சிறு பிள்ளைகளாயிருந்தாலும், எவரையும் இகழ்ந்து அவமதிக்காமல், மதிப்புக் கொடுத்து நடத்துதல் மிகவும் நல்ல நெறியாகும்.

பெரியவர்கள் இருக்கும்போது, அவர்களின் முன்னிலையில் சிரித்தல், கொட்டாவி விடுதல், கான்று உமிழ்தல், தும்முதல் ஆகிய செயல்களைச் செய்தல் கூடாது, ஆசிரியர்களிடம் மாணவர்கள் மிக்க அன்புடனும், பணிவுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுதல், மாணவர்களுக்கு இன்றியமையாத பண்பாகும். நல்ல மாணாக்கர்கள் ஆசிரியர் இரு என இருந்தும், சொல் எனச் சொல்லியும், செல்க எனின் சென்றும், அவர் கூறுவனவற்றைச் செவி வாயாகவும் நெஞ்சுகளனாகவும், சித்திரப்பாவை போல் அடங்கிக் கருத்தூன்றி இருந்து கேட்டு, மறவாமல் உள்ளத்தில் பதித்துக் கொள்வர்.

ஒருவரிடத்தில் ஏதேனும் ஒன்றைச் சொல்ல நேர்ந்தால், வேகமாகவும் மிக உரத்தும் பேசுதல் கூடாது. ஒன்றையே பலமுறை திரும்பத் திரும்பப் பேசுதல், தெரிந்த செய்தியையே விரிவாகப் பேசிக் காலத்தைப் போக்கி வீணாக்குதல், சிறிய செய்தியைப் பெரியதாக மிகைப்படுத்துதல் முதலியன கூடாது. சொல்ல வேண்டிய பொருள்களுள் முதன்மையான எதனையும் விடாமலும், வேண்டாத செய்தியை விலக்கியும், காலமும் இடமும் அறிந்து, கேட்பவரின் மன நிலையை உணர்ந்து, சில சொற்களில் தெளிவாகச் சொல்லுதல் நல்லது.

ஒவ்வொரு மனிதனும் எறும்பு, தூக்கணங்குருவி, காக்கை என்பவற்றைப்போல நல்லியல்பும் செயலும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். அதனால் அவனுக்கு ஆசாரமாகிய ஒழுக்க வாழ்க்கையின் மேம்பாடு ஏற்படும். எறும்பைப் போன்ற சுறுசுறுப்பு மனிதனுக்கு இன்றியமையாதது; தூக்கணங்குருவி கூடு கட்டுதல் போன்று சிறந்த செயலாண்மைத் திறம் நமக்குத் தேவை; காக்கையைப் போல உறவினரையும் நண்பினரையும் தழுவி விருந்தோம்பும் திறம் நமக்குப் பெருமையைத்தரும்.

முடிவுரை :

இத்தகைய ஆசாரங்கள் பலவற்றைச் சிறந்த இனிய முறையில், **ஆசாரக் கோவை** என்னும் நூலில் பெருவாயில் முள்ளியார் என்னும் சங்ககாலப் புலவர், நமக்குப் பயன்தரும் முறையில் நலமுற விளக்கியருளியிருக்கின்றார். நாகரிகமும் பண்பாடும் வாய்ந்த நன் மக்களிடத்திலேயே, இத்தகைய நல்லொழுக்க முறைகளாகிய ஆசாரங்கள் அமைந்து காணப்படும். முன்பின் பழக்கமில்லாத அயல்நாட்டவன், வறுமைமிக்கவன், வயது முதிர்ந்தோன், இளஞ்சிறுவன், பிணிவயப்பட்டவன், பயமுற்றவன், அரச அலுவலில் உள்ளவன், மணமகன் முதலியவர்களின் திறத்தில், மேற்கூறிவந்த நல்லொழுக்கமுறைகளாகிய ஆசாரங்கள் முற்றிலும் வற்புறுத்தப்படமாட்டா. இவைகளில் அவர்களுக்கு ஏற்ற பெற்றி விதிவிலக்கு உண்டு என்றும் குறிப்பிட்டு, ஆசிரியர் இந்நூலை முடிக்கின்றார்.

இந்நூல், ஒருவகையில் உடல் நலக் கோட்பாடுகள் (Hygenic principles) பற்றிக் கூறுவதாகவும், தனிமனிதனுக்குரிய நல்லொழுக்க முறைகள் (Moral & Ethical Codes) பற்றி

அறிவுறுத்துவதாகவும்: சமுதாயச் சூழலிற் பலரொடு கலந்து பழகும் நெறி முறைகள் (Social-manners & Etiquettes) பற்றி விளக்குவதாகவும், சிறந்த முறையில் அமைந்துள்ளது.

இந்நூல், ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டதேயாயினும், இக்காலத்திற்கும் ஏற்ற புதுமைநலம் உடையதாகப் பொலிகின்றது. இவ்வியல்பே சிறந்த இலக்கியங்களுக்குரிய சீரிய பண்பாகும் (1). இத்தகைய புதுமைப் பொலிவுப் படைப்புத்திறன் மிக்க உயிர்ப்பாற்றலுடைய நூல்கள் தாம், எத்தனைக் காலமாயினும் அழியாது நின்று நிலைபெறும்; நவில்தொறும் நயம்பயக்கும். காலத்தால் வாடிக் கழியாமலும், பன்னலமார் சீலத்தாற் சுவை செறிந்தும், சாலத்தான் அறிவூட்டி ஆர்வப்பசி பெருக்கியும் நிற்க வல்ல நூல்களே, திருவள்ளுவர் குறிப்பிட்ட ''இலங்கு நூல்கள்'' (Classics) ஆகும். ஆதலின், இத்தகைய பழமையும் பெருமையும் வாய்ந்த, பயன்மிக்க நல்ல நூல்களை, நாம் அனைவரும் நன்கினிது கற்று, கற்றபடியே நின்று பொற்புற வாழ முயல்வோமாக!

முத்திதரும் தலங்களுளே முதன்மைமிகும்
காஞ்சிஅருள் முனிவர் பெம்மான்,
பத்தியொடு நல்லலொழுக்கம் பரவும்வணம்,
நற்கோடைப் பயிற்சி தோற்றி,
உத்தமநல் ஆசிரியர்க்கு உணவுஉறையுள்
வழங்கி, இனிது ஒழுகச் செய்தார்!
வித்தகராம் அவர்திருத்தாள் மிக்கநன்றி
யுடன்போற்றி, விரும்பி வாழ்வாம்!

—ந. ரா. முருகவேள்



ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி,
இளையனூர், வேலூர்

பழியின் பரிசு

திருமலை நல்லான் இராமகிருஷ்ணையங்கார்

'எல்லாம்வல்ல இறைவனைப் பற்றினர்க்கு எவ்விடத்தும் எவரிடத்தும் எதற்கும் அச்சம் ஏற்படமாட்டாது. நமனையும் அவர்கள் அஞ்சார். நமன்தமர் தலைகள்மீது நாவலிட்டுழி தரும் வல்லமை அவர்களுக்கு வந்துவிடுகிறது. தன்னைப் பற்றினர்க்கு இங்ஙன் அச்சத்தைத் தவிர்த்து ஏற்றமளிக்கும் இறைவனுக்கும் சில கால் அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறதாம். ஆம், அபயம் அளிப்பவனுக்கும் பயம். அவனுக்கு எதுபற்றிப் பயம்? தனக்கோ தன்னடியார்களுக்கோ வரும் பழிபற்றி நமது அச்சத்தை அவன் போக்கடிக்கிறான். அவனது அச்சத்தை யார் போக்கடிப்பது? தனது அச்சத்தைத் தானே போக்கடித்துக்கொள்வது தவிர வேறு வழியில்லை. இல்லாமற் போகவே பழிக்கு அஞ்சுவதும், அப்பழியை நீக்கி அச்சம் தெளிவதும், இறைவனுக்குத் தவிர்க்க ஒண்ணுதவைகளாகின்றன.

பழியும் பாவமும்.

''பழி'' என்பதற்குப் பழிக்கப்படும் செயல் அதாவது பாவம் என்று பொருள் சொல்லப்படுகிறது. ''பழியஞ்சிப்பாத்தூண் உடைத்தாயின்'' என்னுமிடத்துப் பரிமேலழகர் உரை காண்க. ''நிந்திதம் கர்ம'' என்பர் ஆளவந்தாரும். இங்ஙனம் பழி என்பது பாவத்தைக் கூறுமாயினும், ''பழிபாவம்'' என்கிற உலக வழக்கிலும், ''பழிபாவம் கையகற்றி'' (2. திருவந்த. 20) என்கிற செய்யுளிலும், அதற்கு வேறு பொருள் கூறியே தீரவேண்டும். இவ்விடங்களிற்பழி என்பது, பழித்தற்குக் காரணமாகிய தீவினை இல்லாவிடினும், இருப்பதாக அதை ஏறிட்டு இழித்துக்கூறுவது. பாவமென்பது உண்மையாகவே உள்ள தீவினை ''பழி பாவம்'' என்கிற கீழ்க்காட்டிய செய்யுளின் சொற்றொடருக்கு ''அடியுண்டாயும் அடியின்றிக்கேயுமுள்ள விரோதங்கள்'' என்று விளக்கம் தருகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

பழிக்குத்தான் அஞ்சுகிறான் இறைவன்; பாவத்துக்கு அஞ்சுவதில்லை. ஏனெனில், அவனிடம் இரவியில் இருள் போல் பாவமிருக்க முடியாது. இனி, அடியார்களோ, ''என்னடியார் அது செய்யார்'' என்றபடி பாவமே செய்யாதவர்கள். ஒரு கால் அவர்கள் பாவமே புரியினும் ''செய்தாரேல் நன்று செய்தார்'' என்றபடி, குற்றத்தை நற்றமாகக் கொள்ளும் இயல்பினனாதலின், பாவமாக அது தோற்றாமையின் அதற்கு அஞ்ச இடமே இல்லை என்க. பழியோ அங்ஙனன்று. அது அடியில்லாமலே எழுவது. அயலாரால் நேருவது. ''நாவிற்கு நல்குரவு இல்'' (பழமொழி) என்றபடி, இறைவனையும் எத்தகைய பெரியோரையும் தூற்றுவோர் நூற்றுக்கணக்கில் உலகில் உள்ளனரன்றோ? அவர்களது அடியற்ற தூற்றுதலாகிய பழிக்குப் பயப்படுகிறான் பரமன். தன்னைப்பற்றிய பழியினும், தன்னைச் சார்ந்தாரைப் பற்றிய பழிக்கு மிகவும்

நடுநடுங்குகிறான். தூய்மையை வெளிப்படுத்தி அவர்களது பழியைத் தீர்ப்பதையே முதற்பணியாகக் கொள்ளுகின்றான் இறைவன்.

பழியஞ்சும் சொக்கன்

வேதியன் ஒருவன், முன்னரே வேடனொருவனால் கிளியை அடிப்பதற்காக எய்யப்பட்டு, மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த அம்பு, தற்செயலாய் விழுந்ததனால் தன் மனைவி இறக்க, அதனையறியாது அங்கிருந்த வேறு எவனோ ஒரு வேடனைக்கொன்றானாகக்கொண்டு பாண்டிய மன்னனிடம் முறையிட, பாண்டியன் உண்மை நிலையறிய இயலாது திகைக்க, பக்தனான பாண்டியனுக்கு இவ்வழக்கில் நேரும் பழிக்கு அஞ்சிச் சொக்கேசன் இயமபடர்களை நேரே தோற்றச் செய்து, அப்படர்கள் ஒருவருக்கொருவர் பேசும் பேச்சினால், பாண்டியனுக்கும் அவ் வேதியனுக்கும் உண்மை நிலையை உணர்த்தி, அப்பழியை அப்பொழுதே போக்கியருளி ''பழியஞ்சும் சொக்கன்'' என்னும் பேர் பெற்றானென்று திருவிளையாடற் புராணம் சொல்வது இங்கு நினைவிற்கு வருகின்றது.

இங்ஙனமே சம்பந்தரின் அருளுக்கு இலக்கான வணிகன் மகளுக்கு நேர்ந்த பழிக்கு அஞ்சித் திருமணச் சான்றுகளாகத் திருப்புறம் பயத்திலிருந்து மதுரைக்குக் கூவம், வன்னி இலிங்கங்களை உடனே வருவித்துப் பழி தீர்த்து ''பழியஞ்சும் சொக்கன்'' என்னும் பேரை நிலைநிறுத்திக்கொண்டதாகக் கூறப்படுவதும் நினைக்கத் தக்கது.

பழிக்குப் பரிசு.

இறைவன் தன்மையை உணர இயலாத சிலர், அவன் குணங்களையே குற்றமாகக் கொண்டு அவன் மீது பழி சுமத்திக்கொண்டேயிருப்பர். அத்தகைய பழியாயின் அதற்கு இறைவன் அஞ்சாததோடு பிரம்மனாதியர்க்கும் எட்டாத பரமஸாம்யம் என்னும் பேரின்ப முத்தியையே பழி சுமத்தியவர்க்கு அளித்துவிடுகிறான். பழித்தற்காயினும் என்பேரைச் சொல்லி என்னை நினைத்துக்கொண்டிருக்கிறானன்றோ என்று கருதி அளிக்கிறான் அப் பெருந்தகை. ''வைது நின்னை வல்லவாபழித்தவர்க்கும் வந்துனை எய்தலாகும் என்பர்'' (திருச்சந்த. 111) என்று திருமழிசைப்பிரான் அருளியுள்ளமை காண்க. பழித்துப் பரமனை எய்தியவர்க்குச் சிசுபாலனை உதாரணம் காட்டி ''பகவானுடைய சக்கரத்தாலே கொல்லப்பட்டவனாய், அவனை நினைத்தலால் பாவமனைத்தும் பொசுங்கப் பகவானால் முடிவுறுத்தப்பட்டு அங்கேயே லயம் அடைந்தான்'' என்னும் பொருள் கொண்ட விஷ்ணு புராண வசனத்தைச் சான்றாக எடுத்துக்காட்டி விளக்கம் தருகிறார் பெரியவாச்சான் பிள்ளை. பழித்த சிசுபாலனுக்கு வீடளித்தது, மீண்டும் வந்து தொல்லை கொடுக்காமலிருப்பதற்காக மீட்சியில்லாத இடத்தில் வீசியெறிந்த அவ்வளவே என்பர் ஆளவந்தார். பழித்தலாற் பெறுவது பேறாகாது என்பது கருத்து.

இனி, இறைவனே தன்மீது ஏறிட்ட பழியினாற் பயன்பெற்றதும் உண்டு. ஸ்யமந்தக மணியைக் கண்ணன் பறித்துவைத்துக்கொண்டிருப்பதாக ஒரு பழி ஏற்பட்டது. அதன் பயனாகக் கண்ணனுக்கு ஜாம்பவதியும், ஸத்யபாமையும் கிடைத்தனர். விவரம் விஷ்ணு புராணத்திற் கண்டு கொள்க.

இறைவன் ஏறிடும்பழி

அடியார்களுக்கு அயலாரால் அன்றிச் சிலகால் இறைவனாலேயே பழி நேருவதும் உண்டு. அத்தகையபழி நல்ல எண்ணத்துடன் இழைக்கப்பட்டதாதலின், முடிவில் அதுவும் பயன்படுவதாகவே அமையும். அப்பழியையும் அஞ்சித் தக்க வேளையிற் போக்கடித்து விடுகின்றான் இறைவன். கைங்கர்யம் செய்துகொண்டிருந்த தொண்டரடிப்பொடியார், மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்தும்போது, அவர்க்கு நன்மைபயக்கப் பொன் வட்டிலைக் களவாடியதாகக் களவுப்பழியை அவர்மேலேற்றிப் பின்னர்த் திருவரங்கன் தானே அதனை மாற்றி, அவரை ஆட்கொண்ட வரலாறு இங்கு அறியத்தக்கது.

இவ்வாறே இராமபிரான் தன்னைச் சார்ந்தோர் பலர்மீது பழியை ஏறிட்டு நன்மை பயந்திருப்பதை இராமாயணத்திற் காணலாம். முதலாவதாகத் தயரதன் மீது பழி ஏறிடுகிறான். கொடுத்த அரசை மீட்டுப் பெண் சொற்கேட்டுப் பண்புமிக்க மூத்த புதல்வனைக் காட்டுக்கு அனுப்புவதாகப் பழி ஏறிடப்படுகிறது தயரதன் மீது.

கொடியளாய் மாறிக் கொண்டவளை வற்புறுத்தி ஆட்சியைக் கொண்டு குணக்கொண்டலாம் இராமபிரானைத் தண்டகாரணியத்துக்குப் போகச் செய்த பழி கைகேயி மீதும், தூய தாயுள்ளத்தைப் பேயுள்ளமாக்கியதாகக் கூனி மீதும், தாய்வாயிலாக இராமபிரானைக் காட்டிற்கு ஓட்டி நாட்டினைக் கைப்பற்றிட முயன்றதாகப் பரதன் மீதும் பழிகள் ஏறிடப்படுகின்றன.

இப்பழிகள் யாவும் இறைவனும் இராமபிரானது சங்கற்பத்தால் நேர்ந்தவை. வேறெவராலும் நேர்ந்தவையல்ல. தேவர்களுடைய முயற்சியின் பயனாக இவை ஏற்பட்டன என்று கூறப்பட்டாலும், இறைவனான இராமபிரானது சங்கற்பத்துக்கு இயையவே அவர்கள் முயற்சி அமையுமாதலின், இப்பழியனைத்துக்கும் மூலகாரணம் இராமபிரானே என்க.

பாவமும் அறமும்.

இனி, கவிஞர் பெருமான் கம்பன் ''அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும் துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்'' என்று கைகேயியின் மனமாற்றத்துக்குப் பாவத்தையும் அறத்தையும் காரணமாகக் கூறியுள்ளானே எனில், அக்கூற்றிற்கும் இராமபிரான் காரணம் என்பதே கருத்து. அதனை விளக்குதும்.

அரக்கர் பாவமாவது, முனிவர்கட்கும் மற்றும் நல்லோர்கட்கும் தேவர்கட்கும் துன்பமுண்டாக்கும் இராக்கதர்களுடைய தீச்செயல்; அல்லவர் அறமாவது தேவர்கள் அத்துன்பத்தை நீக்குமாறு இறைவனிடம் செய்த சரணாகதி. இவ்விரு செயல்களும் இராமாயணக் கதைக்கு ஊற்றுவாயாய் அமைந்த கைகேயியின் இரக்கமின்மைக்குக் காரணமாயின என்கிறான் கவிஞன். தீமைபயப்பது பாவம்; நன்மை பயப்பது அறம்; அரக்கர் பாவம் அவர்கட்கு அழிவைப் பயக்கும். அல்லவர் அறம் அவர்கட்கு அல்லலைத் தொலைத்து வாழ்வைப் பயக்கும். ஆகவே அரக்கர் அழியவும், அல்லவர் வாழவும், இராமபிரான் காட்டிற்குப் புறப்பட இவைகள் ஏதுவாயின. ஆயின் அழியுந் தன்மை வாய்ந்த செயல் வடிவமான பாவமோ அறமோ, முறையே அரக்கர்களை அழிக்கவோ அல்லவர்களை வாழ்விக்கவோ வல்லவைகள் அல்ல. ஆதலின் இராமபிரானே அரக்கர்களையழித்துத் தேவர்களை வாழ்விப்பதை நாம் காண்கின்றோம். காணவே, கவிஞன் இங்குப் பாவமென்றும், அறமென்றும் குறிப்பிட்டது இராமபிரானையே என்று நாம் துணிதல் வேண்டும். அரக்கருக்குப் பாவ வடிவமாகவும், தேவருக்கு அறவடிவமாகவும் அமைதலின், இராமபிரானைப் பாவமும் அறமுமாகக் கவிஞன் கூறினனென்க.

செயல்வடிவமாயுள்ளமையின் அழிவனவும் அழிவற்றனவுமான, அறங்களுக்கும் பாவங்களுக்கும் அளவறிந்து தக்கவாறு தக்க தறுவாயிற் பலனளிக்கும் ஆற்றல் இல்லை. ஆதலின் அறத்தால் அருளும், பாவத்தால் சீற்றமும் கொண்ட இறைவனே, முறையே நன்மை தீமைகளை அளவறிந்து தக்க வேளையில் தருகிறான் என்பது சாஸ்திரங்களின் கருத்து. அறிவார்ந்தவனாதலின் இறைவன் அளவறிந்து தரமுடிகிறது. அழிவற்றவனாதலின் அவன் தக்க வேளையில் இருந்து தரமுடிகிறது. திருட்டுக் குற்றம் சிறை தருகிறதென்றால், அக்குற்றத்தினால் சீற்றம் கொண்ட அரசன் குற்றத்தின் தன்மைக் கேற்பச் சிறைத்தண்டனையளிக்கிறான் என்பது போல, இதனையும் கொள்க. அங்ஙனம் கொண்டே கவிஞர் பெருமான், சீற்றம் கொண்ட இறைவனைப் பாவமென்றும், அருள் சுரக்கும் இறைவனை அறமென்றும் குறிக்கின்றான் என்க.

ஏனைய இடங்களிற் பாவத்தால் தூண்டப்பட்டு ஒருவன் கேடு விளைவிப்பதாகவும், புண்ணியத்தால் தூண்டப்பட்டு நன்மை புரிவதாகவும் சொல்ல இடமுண்டு. இங்கோ ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறனும் உளனான சர்வ அந்தர்யாமி ஆகிய இராமனைப்பற்றிப் பேசும் இடமாதலின், அங்ஙன் சொல்ல வழியில்லை என்க. இங்குச் சொன்ன முறைப்படியே ''விதி'' என்பதற்கும் எல்லாம் வல்ல இராமபிரான் என்று பொருள் கொள்வதே தகும்.

ஆக, இறைவனுக்கும் பழியச்சம் இருத்தலும், பழிபாவங்களின் வேறுபாடும், பழியே அச்சத்துக்கு ஏதுவானமையும், சொக்கன் பழியஞ்சுதலைத் தன் பேருக்கிக் கொண்டமையும், இறையைப் பழித்தற்குப் பரிசும், பழிக்கு இலக்கான இறைக்குக் கிடைத்த பயனும், அடியார்மீது இறைவன் பழியேற்றிடுதலும், தயரதன் முதலியோர் மீது இராமன் ஏறிட்ட பழிகளும், இராமபிரானே பழிக்குக் காரணமான பாவமும் அறமுமாயிருத்தலும் கூறப்பட்டன.


சில்பி

வித்தகச் சான்றோர் விவேகானந்தர்

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை:

நம் இந்திய தேசம் தொன்றுதொட்டே சான்றோர்கள் பற்பலர், வாழையடி வாழை யாகத் தோன்றி வரும் பெருமை மிக்கது. அங்ஙனம் தோன்றியருளிய சான்றோர்கள் பற் பலரில், அண்மைக் காலத்தில் (12-1-1863) தோன்றியருளி, அரும்பெருஞ் செயல்களைச் செய்தருளிய சான்றோர்களுள், சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒருவர் ஆவார்.

'' அனுச யப்பட்டு அதுஇது என்னுதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே''

எனத் திருநாவுக்கரசர் பாடுவது போல, ''மனி தரில் தலையான மனிதர்'' சுவாமி விவேகா னந்தர்! ''நரேந்திரர்'' என்னும் அவர்தம் இயற் பெயருக்கும் பொருள் இதுவேயாதல் கருதி மகிழத்தக்கது.

மிக்க விழுத்தவ வேந்தர் :

''செயற்கரிய செய்வார் பெரியர்'' என் னும் சிறந்த உண்மைக்குச் சுவாமி விவேகானந் தர் அவர்களின், தூய தவ வாழ்க்கை இனிய நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. அவர் தம் அழகிய இனிய அருமைத் திருவுருவம்,

'' ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்''

என வரும் பெரியபுராணத் திருப்பாடலை, நம் மனோர்க்கு நினைவூட்டி இன்புறுத்துகின்றது. சுவாமி விவேகானந்தர் அவர்களின் தூய தவத் திருக்கோலம், எவர் உள்ளத்தையும் கவரும் பெற்றியினதாகப் பிறங்குகின்றது. சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பற்றிச் சேக்கிழார் குறிப் பிடுவதுபோல, ''மிக்க விழுத்தவ வேந்தர்'' (6:130) எனச் சுவாமி விவேகானந்தர் அவர் களைப் பற்றியும் நாம் கூறி மகிழலாம்.

தாய் தந்தையர் :

புறச் சமயங்களால் சைவ சமயம் நலிந் திருந்தபொழுது திருஞானசம்பந்தப்பெருமான்

தோன்றியருளியது போல, விவேகானந்தர் அவர்களும், இந்து மதமும் இந்திய தேசமும் மிக நைந்து நலிந்திருந்த காலத்துத் தோன்றி யருளினர். உலகத்தை உய்விக்கத் தோன்றி யருளும் சான்றோர்கள் அனைவரும், இறைவனின் அருளாலேயே உலகத்தில் உதிப்பர். சிவபாத இருதயர், பகவதியார் என்னும் இதுமுது குர வர்களின் தவத்தின் பயனாக ஞானசம்பந்தர் தோன்றியவாறு போல, விசுவநாததத்தர், புவ னேசுவரி அம்மையார் என்னும் தலைமக்கள் இரு வர்க்கும் மைந்தராக, விவேகானந்தர் தோன்றி யருளினர். ''விளையும் பயிர் முளையில் தெரி யும்'' என்பதற்கு ஏற்ப மிக இளமையிலேயே பல அரிய பண்பு நலங்கள் அவர்பால் அமைந் திருந்தன.

அறிவாற்றல் நலங்கள் :

விவேகாநந்தர் பன்னிரண்டாம் வயதி லேயே "முக்த போத வியாகரணம்" என்னும் சம்ஸ்கிருத இலக்கண நூலை மனப்பாடம் செய்துவிட்டார். பிறிதொரு சமயம் பாணி னியின் "அஷ்டாத்யாயி" என்னும் வடமொழி இலக்கண நூலை ஐயந்திரக் கற்று, ஒரு சில நாட்களில் முடித்துவிட்டார். வங்காள மொழி யில் அவருக்கு மிகச் சிறந்த தேர்ச்சி அமைந் திருந்தது. கணிதத்தையும், வான சாத்திரத் தையும் அவர் நன்கு கற்று வல்லவரானர். வோர்ட்ஸ் வொர்த், ஷெல்லி முதலிய ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளை அவர் ஆழ்ந்து சுவைத்து மகிழ்ந்தார். ஹெர்பர்ட் ஸ்பென்சர், கேண்ட், ஷோப்பனேர், ஜான்ஸ்டூவர்ட் மில் முதலிய மேலை நாட்டறிஞர்களின் நூல்களையெல்லாம் நுணுகிக் கற்றுர். சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ் டாட்டில் முதலிய பலரின் தத்துவ நூற் கொள் கைகளையெல்லாம் அவர் திறம்பட அறிந்திருந் திருந்தார். சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாமியம் ஆகிய பல சமய நூல்களிலும் அவருக்கு ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் இருந்தன. இசைக்கலை, நாடகக் கலை, ஆகிய வற்றிலும் அவருக்கு மிக்க ஈடுபாடும்பயிற்சியும் உண்டு. நாவன்மையும், சொற்போர்த் திறனும் இயல்பாகவே அவர்பால் மிகுந்து காணப் பெற்றன. சுரேந்திரநாத பானர்ஜி, ஈஸ்வர சந்திர வித்யாசாகரர் போன்ற பேரறிஞர்கள் பலரும், இளமையிலேயே சிறந்து விளங்கும் இவர்தம் அறிவாற்றல் நலங்களைக் கண்டு வியந்து பாராட்டி மகிழ்ந்தனர்.

அருட்குரவர் தலைப்பாடு :

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரை, முதன் முதலாக நரேந்திரர் 1881 ஆம் ஆண்டு, நவம் பர் மாதத்தில் சந்திக்கும் பேறு பெற்றுர். நரேந்திரரின் கல்லூரித் தலைவராகிய வில்லியம் ஹேஸ்டி என்பவர் வோர்ட்ஸ் வொர்த் இயற்றிய 'புற உலா' (The Excursion) என்னும் ஆங் கிலக் கவிதையினை பி.ஏ. வகுப்பிற் பாடமாக நடத்திக் கொண்டிருக்குங்கால், ''வோர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் இயற்கை எழிலில் ஆழ்ந்து சமாதிநிலை கைவரப் பெற்றவ ராக விளங்கியிருந்தார்'' என்னும் கருத்தினை விளக்க நேர்ந்தபோது, 'தட்சிணேசுவரத்தி லுள்ள இராமகிருஷ்ணர் என்னும் பெரியவர் அத்தகைய அனுபூதி நிலையினைப் பெற்றுள் ளார்' எனக் குறிப்பிட நேர்ந்தது. அவர்தம் சொற்களின் பயனாகவே, நரேந்திரர் ஸ்ரீஇராம கிருஷ்ணரைச் சந்திக்கும் பேறு பெற்றுர். அச் சந்திப்பு, விவேகானந்தரின் வாழ்க்கையில் மட்டு மேயன்றி, இந்திய நாட்டு வரலாற்றிலேயே மிக்க சிறப்பிடம் பெறத்தக்க தொன்றாக அமைந்துவிட்டது.

திருவடித் தீக்கைத் தெய்விக அனுபவம் :

காந்தம் இரும்பை ஈர்த்துக் கொள்ளுவது போல, இராமகிருஷ்ணரின் இணையற்ற தவ ஆற்றல் இளைஞராகிய நரேந்திரரைப் பெரிதும் ஈர்த்து ஆட்கொண்டு விட்டது. எல்லோரிட மும் கேட்டு வந்ததைப் போலவே அவர் இராம கிருஷ்ணரையும், ''ஐயனே! தாங்கள் கடவுளை நேரிற் கண்டு தரிசித்து மகிழ்ந்திருக்கின்றீர் களா?'' என்று வினவினர். அதற்கு அவர் ஏனையோரைப் போலச் சிறிதும் தயங்காமல், ''ஆம்! நான் கண்டறிந்திருக்கின்றேன்'' என்று விடையிறுத்தார். உடனே நரேந்திரர் ''அக்கடவுளை எனக்குக் காட்டத் தங்களால் இயலுமா?'' என வினவினர். ''நிச்சயமாகக் காட்டுவேன்'' என்று மறுமொழி கிடைத்தது. இராமகிருஷ்ணர் தம் வலக் காலை நரேந்திரரின்

உடல் மீது வைத்தார். அத்திருவடித் தீக்கையால், சுவாமி விவேகானந்தர் அவர்கள்,

'' சொல்லுவ தறியேன் ! வாழி முறையோ !
தரியேன் நாயேன் ! தான்எனைச் செய்தது
தெரியேன்! ஆவா செத்தேன் ! அடியேற்கு
அருளியது அறியேன் ! பருகியும் ஆரேன் !
விழுங்கியும் ஒல்ல கில்லேன் !
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து,
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப,
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்! கொடியேன்
ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி,
நிரம்பிய
அற்புதம் ஆன அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்! உருகுவது
உள்ளங் கொண்டுஓர் உருச்செய்தாங்கு
எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்! ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறுஎனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்! என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமுது ஆக்கினன்...''

என மாணிக்கவாசகர் பாடுவதுபோல, ஒரு வகைச் சிறந்த ஆன்மீக அனுபவ வயப்பட்டு நின்றார். பின்னர் ஒரு கால் பஞ்சவடியில் ஓர் ஆலமரத்தின் கீழ் யோகசாதன நெறியில் மிக அரியனவும், மறைபொருளானவையும் ஆகிய செய்திகள் பலவற்றை இராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு அறிவுறுத்தி அருளினர்.

அருளனுபவ வளர்ச்சி :

இவற்றாலும், எதிர்பாரா நிலையில் நேர்ந்த தம் தந்தையின் திடீர் இறப்பினாலும், பிறவற்றாலும், நரேந்திரநாதருக்கு உலகியல் வாழ்வில் நாளுக்கு நாள் உவர்ப்பு மிகுதிப்படலாயிற்று. பகவான் இராமகிருஷ்ணரின் பரிவால்,

'' நூலேணி விண்ணேற
நூற்குப் பருத்திவைப்பார்
போல கருவிநன்நூற்
போதம் பராபரமே''

'' சின்னஞ் சிறியார்கள்
செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னும் கலைஞான
மார்க்கம் பராபரமே''

எனத் தாயுமானவர் பாடுவதுபோல, வெறும் புத்தகங்களின் அறிவுபயன் அற்றது என நரேந்திரர் தெரிந்துகொண்டார். அருளனுபவங்களும், தியான சமாதி நிலைகளும், அவருக்கு மேன்மேல் சிறப்புறக் கைகூடி ஓங்கி வந்தன.

இராமகிருஷ்ண மடம் :

இந்நிலையில் இராமகிருஷ்ணர் 1886 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16 ஆம் நாள், தமது பூதவுடலை நீத்துத் திருவருளிற் கலந்து மறைந்தார். அனைவரும் பெருந்துயரத்தில் ஆழ்ந்து வருந்தினர். நரேந்திரர் ஒருவாறு மனந்தேறி இராமகிருஷ்ணரின் சீடர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, மிகவும் முயன்று ''ஸ்ரீ இராம கிருஷ்ணமடம்'' என்னும் சிறந்த அமைப்பினை நிறுவியருளினர். ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் 1886 முதல் 1892 வரை பெரநாகூரிலும், 1892 முதல் 1897 வரை தட்சிணேசுவரத்திற் சிறிது தொலைவிலுள்ள அலம்பசாரிலும், பின்னர்ப் பெரநாகூர்க்கு நேராக கங்கையாற்றின் அக்கரையிலுள்ள நிலம்பார் முகர்ஜியின் தோட்டத்திலும் இருந்து வந்தது. இதுவே இப்பொழுது பேலூர் மடம் எனப் புகழ்பெற்று விளங்குகின்றது.

குமரி முனையில் தவம் :

விவேகானந்தர் பின்னர் ''பரிவ்ராஜகர்'' என்னும் நிலையை மேற்கொண்டு, இமயம் முதல் குமரி வரை இந்தியநாடு முழுவதும் பல பகுதிகளுக்கும் யாத்திரை செய்தார். கன்னியாகுமரியில் அவர் அம்பிகையைச்சிறப்புற வழிபட்டார். அங்கே அருகிற் சிறிது தொலைவிற் கடல்சூழ அமைந்திருக்கும் பாறை ஒன்றின் மீது சென்று அமர்ந்து மோனத்தவம் புரிந்தார்.

தேவியின் அருளால் அவர்க்கு அங்கு முழுநிறை வான மெய்யுணர்வு முகிழ்த்து நிரம்பிற்று. நிர் விகற்ப சமாதி நிலையிலும், அவர் பரிபூரண சித்தியை அடைந்தார். சுவாமிகளுக்குக் கன் னியாகுமரியில் ஒரு பெரும் புத்துணர்ச்சியும், ஒப்பற்ற தவவலிமையும் பிறவும் ஏற்பட்டன.

மன்னுயிர்களுக்குத் தொண்டு :

இவ் யாத்திரையின் பயனாக இந்திய நாட் டின் பண்பாட்டு ஒருமைப்பாட்டினை, விவேகா னந்தர் நன்கினிது உணர்ந்துகொண்டார். இந்தியாவின் வன்மை மென்மைகளும், குணம் குற்றங்களும் அவர்க்கு நன்கினிது புலனாயின. முதற்கண் இந்திய மக்களின் வறுமையும் அறி யாமையும் ஒரு சிறிதேனும் போக்கப்பட்டா லன்றி, இந்திய நாட்டிற்கு உய்வில்லை என ஐயமின்றித் துணிந்தார். 'இறைவனின் இன் னருளைப் பெறுவதற்கு ஏற்ற எளிய இனிய வழி மன்னுயிர்க்குத் தொண்டு புரிதல் ஒன்றே' என்னும் தமது முடிவினையும்கொள்கையினையும் அவர் தாம் செல்லும் இடங்களிலெல்லாம், எல்லோருக்கும் அறிவுறுத்தினார்.

சிகாகோ சமயப் பேரவை :

1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *11* ஆம் நாள் அமெரிக்க நாட்டில் சிகாகோ நகரத்தில் நிகழ்ந்த உலகசமயப் பேரவையிற் கலந்துகொண்டு, அரியதொரு சொற்பொழி வாற்றினார். அதுவே அவர்தம் அனைத்துலகப் பெரும்புகழுக்குக் காரணம் ஆயிற்று. அங்கு இவர்க்குமுன் பேசிய ஏனையோரெல்லாம் தத் தப் புத்தகப் பயிற்சியாற் பெற்ற அறிவாற்றல் கொண்டு பேசினர். ஆனால் சுவாமிகளோ அம் பிகையின் அருளாற்றல் கொண்டு உரை நிகழ்த் தினார்.

''கீதம் வந்த வாய்மையாற்
கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால்
உணர்ந்துரைக்க லாகுமே?''

எனத் திருஞானசம்பந்தர் பாடுவதுபோல, வெறும் அறிவாற்றல் இறையருளாற்றலின் முன்பு என் செய்தல் இயலும்? ''அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே!'' என்று அவர் தொடங்கிய, தொடக்கமே, அனை வரின் உள்ளத்தையும் ஈர்த்துக் கொள்ளை கொண்டு விட்டது.

சொற்பொழிவுகளில் வற்புறுத்தியவை :

இந்து மதத்தின் பழமை, பெருமை, பரந்த மனப்பான்மை, இந்திய மக்களின் சிறந்த சமயப்பொறுமை, உயர்ந்த சமரசஞானம், பிற சமய மக்களுக்கு இந்திய தேசம் புகலிடம் அளித்து ஆதரித்தமை, ஆகிய பல செய்திகளைச் சுருங்கிய சொற்களில் சுவாமிகள் மிகத் திறம் பட விளக்கியருளினார்.

பல்வேறு இடங்களில் இருந்து புறப்படும் நதிகள் வெவ்வேறு வழிகளில் ஓடினும், அவை கள் ஒரே கடலிற் சென்று கலப்பதுபோல, மக்கள் தத்தம் மனநிலைகளுக்கு ஏற்பக் கைக் கொண்டு ஒழுகும் சமய நெறிமுறைகள் பல வாற்றால் வேறுபடினும், முடிவில் அவைகள் இறைவனது திருவடிகளிலேயே சென்று ஒன்று பட்டு நிற்கின்றன.

''ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே''

—திருமூலர்.

''வேறுபடு சமயமெலாம்
புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின்
விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை!
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல்
வயங்கிற்றம்மா!''

—தாயுமானவர்.

''விலகிவீழ் அருவித் தாரை
வேறு வேறாக ஓடிக்

குலநதிப் பாலி வைப்பின்
ஏகமாய்த் கூடும் தோற்றம்,
அலகில்பல் வழியும் மூதூர்
அணிமையின் ஒன்று மாறும்
பலபல மதமும் ஈற்றின்
ஒருவழிப்படலும் போலும்!''

— சிவஞான சுவாமிகள்

எவரெவர் எந்தெந்த வகையாக வழி பட்டாலும் அவரவர் விருப்பப்படி இறைவன் அவர்களுக்கு அருள்புரிகின்றான்:

''ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'

—திருநாவுக்கரசர்

எல்லாச் சமயங்களும் தத்தம் நிலையில் ஒத்த சிறப்புடையனவே. சமயங்களுள் உயர்வு தாழ்வு இல்லை. அவற்றுள் ஒன்றினை உயர்த்திப் பிறிதொன்றினை இழித்துரைப்பது, கிணற்றுமை கடலாமையை நோக்கிக் கடல் கிணற்றை ஒக்குமோ? என வினவிய செய்தி (கூப மண்டுக நியாயம்) போலும் அறியாமை யேயாகும்;

'' கூவ லாமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே''

—திருநாவுக்கரசர்

என்பன போன்ற பல சிறந்த உயரிய கருத்துக் களைச் சுவாமிகள் பாங்குற மொழிந்தார். இவ் வாற்றால், அச்சமயப் பேரவையின் தலைசிறந்த சான்றோராக, மிகச் சிறந்த வெற்றி வீரராக, உலகை உய்விக்க வந்த ஒப்புயர்வற்ற அருள் ஞான ஆசிரியராக, விவேகானந்தர் அனைவ ராலும் மிக மதித்துப் புகழ்ந்து போற்றப் பெற்றார்! இந்தியாவின் பெருமையும் இந்திய மக்களின் மதிப்பும், இங்ஙனம் சுவாமிகளால் உலகப் பேரரங்கில் மிகச் சிறந்த பெருநிலைக்கு உயர்த்தப்பெற்றன.*

அமெரிக்காவில் தொண்டு:

சிகாகோ சமயப் பேரவைக்குப் பின்னர் விவேகானந்தர் அமெரிக்க நாட்டில் 3 ஆண்டு கள் தங்கினார். பல்வேறு இடங்களில் இந்து மதம் பற்றி அரிய சொற்பொழிவுகளும் வகுப்பு களும் நடத்தினார். அதனால் அமெரிக்காவில் இவருக்குப் பலர் சீடர்கள் ஆயினர். அவர்கள் பலருள்ளும் சகோதரி நிவேதிதை (Miss Margaret Noble) என்பவர் மிகவும் குறிப்பிடத் தக்கவர். விவேகானந்தர்பற்றி அவ்வம்மையார், ''தலைவர் யான் கண்டவாறு'' (The Master as-

---

* If I were to look over the whole world to find out the country most richly endowed with all the wealth, power and beauty that nature can bestow—in some parts a very paradise on earth—I should point to India!

If I were asked under what sky the human mind has most fully developed some of its choicest gifts, has most deeply pondered on the greatest problems of life, and has found solutions for some of them which will deserve the attention even of those who have studied Plato and Kant—I should point to India!

And if I were to ask myself from what literature we, here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans, and of one Semitic race, the Jewish, may draw that corrective which is most wanted in order to make our inner life more perfect, more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life—again I should point to India'.

—Prof. Max Muller,
"India, What Can it Teach us?"

Saw Him) என்னும் சிறந்த நூலை எழுதியுள்ளார். இவ்வாறு அமெரிக்கர் பலரும் சுவாமி **கிருபானந்தர்**, **அபயானந்தர்**, **யோகானந்தர்** என்னும் பெயர்கள் பூண்டு சுவாமிகளுக்குச் சீடர்கள் ஆயினர். வேதாந்தக் கழகங்கள் பல அமெரிக்காவில் ஏற்பட்டன.

இங்கிலாந்தில் ஞானப்பயிர் :

பின்னர் இங்கிலாந்திலும் சென்று சில காலம் தங்கி, அங்கும் இந்திய வேதாந்த ஞானப்பயிரை வளர்த்தார். இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் அவர் சுற்றுப் பயணம் செய்த போது மேக்ஸ் முல்லர் (Max Muller), பால்-ட்யூசன் (Paul Deussen), எட்வர்ட் கார்ப்பெண்ட்டர் (Edward Carpenter), பிரெடரிக் மையர்ஸ் (Frederick Myers) முதலிய இந்தியக் கலைப் பேரறிஞர்கள் (Indologists) பலரைச் சந்தித்து மகிழ்வித்தார்.

'' திறமான புலமைஎனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும் ''

என்றபடி, அவர்கள் அனைவரும் விவேகானந்தரின் வியத்தகு பண்புகள் பலவும் கண்டுணர்ந்து, அன்புடன் பணிந்து அளவளாவி மகிழ்ந்தனர். இதன் பயனாக இந்தியத்தத்துவம் நாகரிகம், பண்பாடு வரலாறு முதலியன பற்றிய ஆராய்ச்சி, மேலைநாடுகளில் மிகுதியாகப் பரவ வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

பிரான்சில் பேரவை :

பிரான்சு தேசத்தில் பாரிஸ் மாநகரில் *1900* ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ''சமய வரலாற்றுப் பேரவை'' (The Congress of the-History of Religions) ஒன்று நடைபெற்றது. சுவாமி விவேகானந்தர் அதன் கண்ணும் கலந்துகொண்டு சொற்பெருக்கு ஆற்றினர்.

'' உள்ளத்தில் உண்மைஒளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்''

என்றபடி அங்கும் அவர்தம் சொற்பெருக்குகள் அனைவரையும் வியந்து பாராட்டச் செய்தன. 3 மாதங்கள் அங்குத் தங்கியிருந்து இந்திய ஞானத்தினை யாண்டும் பரப்பினர். பின்னர் வியன்னா, கான்ஸ்டாண்டிநோபிள், ஏதென்சு, முதலிய நகரங்களின் வழியாக, எகிப்து முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பினர்.

நிர்விகற்ப சமாதி நிலை :

இங்ஙனம் அரும்பெருந் தொண்டுகள் பல ஆற்றிய சுவாமி விவேகானந்தர், தமது *39* ஆம் வயதில் *1902* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் தேதி பேலூர் மடத்தில் நிர்விகற்ப சமாதி நிலை அடைந்து இறைவன் திருவடியை எய்தினர்.

சான்றோர்களிற் சான்றோர் :

விவேகானந்தர் அறிவிற் **சங்கரர்**, அன்பிற் **புத்தர்**, செயலாண்மைத் திறனில் **திருஞானசம்பந்தர்**, தொண்டு நெறியில் **திருநாவுக்கரசர்**, ஞானத்தில் **மாணிக்கவாசகர்**, தோற்றப் பொலிவிற் **சுந்தரர்**, பக்திமைப் பண்பிற் **சேக்கிழார்**, சமரச உணர்வில் **தாயுமானவர்**, பொது நோக்கில் **திருவள்ளுவர்**, தவ வாழ்வில் **இளங்கோ அடிகள்**, அருளனுபவத்தில் ஆழ்வார்களைப் போன்றவர் என்றெல்லாம் கூறத் தக்க நிலையில் வீறுபெற்று விளங்கினர்.

வீரத்தின் நிலைக்களம் :

விவேகானந்தர், 'புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்றபடி வீரத்தின் நிலைக் களமாக விளங்கினர். இந்திய மக்களின் கோழைத்தனத்தைப் போக்கி, வீரவுணர்வைப் புகட்டினர். உடல் வீரம், அறிவு வீரம், அன்பு வீரம், தவவீரம், கருமவீரம், பக்திவீரம், ஞான வீரம் ஆகிய பலவற்றினையும் வற்புறுத்தி, அவற்றிற்கு ஓர் இனிய எடுத்துக்காட்டாகவும் அவர் விளங்கினர்.

'' ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?''

—சேக்கிழார்

உடலைப் பழித்துப் பேசிய ஒரு சிலர் போலாது, உடலைப் பேணுவதன் இன்றியமையாமையைச் சுவாமிகள் பெரிதும் வற்புறுத்தினர். 'கீதைப் பயிற்சியைக் காட்டிலும், காற்பந்தாட்டப் பயிற்சியினால் வீடுபேற்றை

விரைவில் அடைதல் கூடும்' என அவர் அடிக்கடி கூறுவார்.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்
டான் என்று
உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே'

''உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே''
—திருமூலர்

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் :

கருமயோகம், பக்தியோகம், ஞான யோகம், இராஜயோகம் என்பவற்றையெல்லாம் விளக்கிய விவேகானந்தர், உலகியலுணர்விலும் தலைசிறந்து திகழ்ந்தார். மேலை நாட்டின் விஞ்ஞானமும், கீழை நாட்டின் மெய்ஞ்ஞானமும் ஒன்றனோடு ஒன்று தொடர்பு கொண்டு, தம்முள்ளே ''கொண்டும் கொடுத்தும்'' இனிது இயைந்து வாழத்தலைப்பட்டால், மண்ணகமே விண்ணகமாக மாறிவிடும் எனச் சுவாமிகள் பலகாலும் வற்புறுத்திச் சொல்லுவர். பொதுமக்கள் நலத்திற் கருத்து(Concern-for the Masses), பெண்கள் முன்னேற்றம் (Advancemenst and Culture of Womenfolk), நிறுவன அமைப்பாற்றல் (The Power of Organisation), செல்வச் செழிப்பு வளம் (Material Prosperity) என்பன, மேலை நாடுகளிற் போல இந்தியாவிலும் பெருகுதல் வேண்டும் எனச் சுவாமிகள் மிகவும் பாடுபட்டார்.

தேசபக்தியும் தெய்வபக்தியும்

சுவாமிகள் ஒரு சிறந்த சீர்திருத்தச் செம்மல்! ஒப்பற்ற தேசபக்தர்! ஏழை எளியவர்களுக்கு இரங்கும் இனிய துணைவர்! இணையற்ற நிறுவன அமைப்பாளர்! இன்று உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடத்தின் கிளை நிலையங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ளன. ''தரித்திர நாராயணர்கள்'' நலங்கருதித் தொண்டாற்றுதலே இறைவனின் அருள் பெற எளிய வழி எனச் சுவாமிகள் பெரிதும் அறிவுறுத்தினர். இராமலிங்க அடிகள் போலவே,

''கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெல்லாம்
மண்மூடிப் போக!''

என விவேகானந்தரும் வலியுறுத்தினர்! வெறும் தெய்வ பக்தியோடு நில்லாமல், தேச பக்தியும் (Patriotism) அவர்பாற் கொழுந்துவிட்டு மிளிர்ந்தது. காந்தியடிகள் போன்ற பெருமக்கள் பலருக்கும், விவேகானந்தர் ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். இன்றைய இந்து சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் விவேகானந்தர் புரிந்தருளிய தொண்டு அளப்பரியது!

இந்து சமய வளர்ச்சி :

இந்து மதம் ஒரு குறுகிய மதம் அன்று. அஃது, ''இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கு இன்றி (சித்தியார் : 265), எல்லாச் சமயங்களையும் தழுவிக்கொண்டு மகிழும் ''அனைத்துலகப் பெருஞ்சமயம்'' (Universal-Religion) என உலகம் முழுவதற்கும் திறம்பட உணர்த்தியருளிய பெருமை, விவேகானந்தருக்கே உரியதாகும். இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்கும் சிறப்பிற்கும் விவேகானந்தர் ஆற்றிய தொண்டினை,

''படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு விவேகா னந்தர்அருட்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவில் லாத சிவபோகம்
முறுகி முதிர்ந்து விளைந்ததால்''

என ஆசிரியர் சேக்கிழாரின் அரிய திருமொழியின் துணைகொண்டே, ஒருவாறு நாம் உணர்தல் இயலும்!

முடிவுரை :

இத்தகைய பெறலரும் வித்தகச் சான்றோர் ஆகிய விவேகானந்தரின் அரிய நெறியையும் அருளுபதேசங்களையும், நாம் பின்பற்றி வாழ்ந்து ஈடேற முயலுவோமாக.
—ஆசிரியர்

158582
சென்னை-600 008.

நீத்தல் விண்ணப்பம்

(பொழிப்புரை)

[ந. ரா. முருகவேள், M.A,, M. O. L.]

(முற்ரெடர்ச்சி)

(29) காமம் முதலிய குற்றத் தொகுதிகளைப் போக்கி அருளினை எனின், என்னைக் குற்றங்களினின்றும் போக்கித் திருத்தியவன் ஆவாய்! மேருமலையாகிய வெற்றிதரும் வில்லையுடைய என் தந்தையே; என்னை நீ கைவிட்டு விடுவாயோ? பொன்னைப்போல ஒளி விடுகின்ற கொன்றை மலர் மாலையை அணிந்த, அழகிய தாமரைமலர் போன்ற திருமேனியை உடைய, என் தந்தையே! ஒப்பற்ற முழு முதல்வனே! மத்தினுல் வலிமையாகக் கடையப்பட்டுச் சுழலும் தயிரைப்போல, யான் (ஆணவம். கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும்) ஐந்து மலங்களாலும் தாக்கப்பட்டு வருந்திச் சுழல்கின்றேன்.

(30) மத்தினுல் கடையப்படும் குளிர்ந்த தயிரைப் போன்று, புலன்களாகிய தீ பற்றிக் கொண்டு வெதுப்புவதனுல் கலக்கமுற்று, அக் கலக்கத்தில் அழுந்தி ஊன்றிவிடும் நிலைமை எய்துகின்ற எளியேனை நீ கைவிட்டு விடுவாயோ? வெண்மை நிறமுடைய, இறந்தார் தலையைச் சடையிற் சூடி, கொத்தாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையை அணிந்து, குடராகிய நீண்ட மாலையைக் கழுத்திற் சுற்றிக் கொண்டு, பரவுதல் பொருந்திய திருநீற்றுடன், சந்தனத்தினது செம்மையான கலவையை அணிந்து திகழும் மெய்ப் பொருளாக உள்ளவனே!

(31) மெய்ப் பொருளாக உள்ளவனே! மிக்கதாகிய குளிர்ந்த நீர், வானம், காற்று, நிலம், தீ ஆகிய பஞ்ச பூதங்களாகவும் விளங்கும் வித்தையை உடையவனே! என்னைக் கை விட்டுவிடுவாயோ? வெண்மை, கருமை, பசுமை, செம்மை, பொன்மையாகிய நிறங்களைக் கொண்ட திருமேனியை உடையவனே! ஒளி பொருந்திய படத்தினை உடையபாம்பாகிய அரைப்பட்டிகையைத் தரித்தவனே! அகன்ற கால்களையும், தாக்குகின்ற தொழிலையும் உடைய யானையைக் கொன்றவனே!

(32) வலிமை மிகுந்த யானையைப் போன்ற மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் புலன்களுக்கும் அஞ்சி நிலைகலங்கிய எளியேனை, நீ கைவிட்டு விடுவாயோ? சிறந்த தொண்டர்களுக்கு அல்லாமல் மற்றவர்கள் தொடுதற்கும் அருமையாக உள்ளவனே! ஒளி வீசுகின்ற பெரிய மாணிக்க மணியே! சுடுகின்ற இயல்பை உடைய தீக்கொழுந்து சுழன்று எரியும்படி, திருப்பாற் கடலில் கரிய நிறமுடையதாகத் தோன்றிய, கொடிய நஞ்சினை இனிய உண

வாகக் கொண்ட, கரிய கழுத்தை உடைய வனே ! எளியேனை எக்காலத்தும் விட்டு நீங்கு தற்கு இயலாதவனே !

(33) மனத்தில் நினைத்தன எல்லாம் செய்து திரிந்தும், நின்னுடைய அருளாகிய தேனை நிறையக் குடித்துக் களிப்பு மேலிட்டுச் செருக்குற்றுப் பேசி அலைந்து திரிகின்ற அற்ப னாகிய என்னை நீ கை விட்டுவிடுவாயோ ? நினது மணம் மிக்க தாமரை மலர் போன்ற திருவடி களை, முன்னொரு கால் தந்ததுபோலக் கொடுத்து, தொண்டு செய்யக்கூவி அழைத்து, என்னுடைய தந்தையே ! என்னை நீ ஆளாகக் கொண்டு,ஒழித்து விடுதற்குரிய என் தீய ஆசை களை ஒழித்தருள்வாயாக !

(34) நின்னுடைய திருவுள்ளக் கருத் திற்கு ஏற்ப ஒழுகுதலில் ஆசைப்படாமல், என் மனம் போன போக்கின் படியே தீய செயல் களைச் செய்து கொண்டு, உலக நுகர்ச்சிகளைப் பெற மிகவும் விரைகின்றவனாகிய இழிந்த என்னை, நீ கைவிட்டு விடுவாயோ ? விட்டு விடாதே ! வாழைப் பழத்தைப் போல எளியேனின் மனத்தை நெகிழ்ந்து குழையும்படி செய்து மணம் நிறைந்து இனிமை மிக்க பூந்துகளோடு கூடிய நல்ல தேனைப்போல், நீ எனக்கு எதிர் வந்து காட்சியளித்தல் எப்பொழுது? என்னை நின்பால் விரைவில் அழைத்துக் கொள்க ! வெள்ளிமலையில் வீற்றிருக்கும் மிக மேலான பெருந்தலைவனே !

(35) மிக மேலான பெருந்தலைவனே ! நினது பழைய மெய்யடிவர்களின் தூய ஒழுக் கத்துடன், எனது வஞ்சக ஒழுக்கத்தையும் விரும்பி ஏற்றுக் கொள்கின்ற, சிவபெருமானே! நீ என்னைக் கைவிட்டு விடுவாயோ ? விட்டு விடாதே, முயலாகிய களங்கத்தை உடைய திங்களின் மெல்லிய பிறையை, பாம்புடன் சடையில் சமமாக வைத்து அழகுற அணிந்த வனே! எங்கள் தலைவனே! ஐந்து கொடிய வாய் களை உடைய பிறவியாகிய பாம்பு, பாவியாகிய என்னுடைய உள்ளம் நடு நடுங்கி, ஒடுக்கிடத் தைச் சாரும்படி தாக்குகின்றது.

(36) மரப் பொந்தில் பொருந்திய நெருப் பைப் போலப் புகை படர்ந்து எரிகின்ற புலன் களாகிய நெருப்புப் பற்றிக் கொள்ள, அதனால் வெதும்புதலை உடைய எளியேனை நீ கை விட்டு விடுவாயோ? நறுமணம் பொருந்திய, தேன் நிரம்பிய மந்தார மலரில், தாரம் என்னும் எடுத்தல் இசையைப் பாடிப், பின்பு படுத்தல் இசையை ஒலிக்கும் வண்டுகள், அமிழ்தற்கு ஏதுவாகிய செழித்த தேன் விளங்குகின்ற, சடையினைஉடைய, ஞான வெளியாகிய வானத் தில் வீற்றிருக்கும் வெற்றி மிக்க பேரரசனே !

(37) அரசனே ! அறிவு இல்லாத சிறியே னுடைய எனது பிழைகள் நீங்குவதற்கு, அஞ் சேல் என்று நீ கூறுதல் அல்லாமல் வேறு துணை இல்லை. நறுமணம் பொருந்திய சடை முடியை உடையவனே ! நீ என்னைக் கைவிட்டு விடு வாயோ ? வெண்மையான பற்களையும், கருமை யான கண்களாகிய கடலினையும் உடைய உமை யம்மையை மணந்தவனே ! அழகிய பொன் போன்ற திருவடிகளை உடையவனே ! பாம்பு களை அணிந்த பெருமானே ; பல மலைகள் ஒருங்கு திரண்டு வந்து நெருக்கினாற்போல, வலிய தீவினை கள் திரண்டு வந்து என்னை நெருக்கி வருத்து கின்றன.

(38) தாக்குகின்ற ஐம்புலன்களினால் நின்னைப் பிரிந்து அச்சம் கொண்டு, அழகிய சொற்களையுடைய இளம் பெண்களின் முழை போன்ற இடங்களை விடாமல் பற்றி நிற்கின்ற எளியேனை நீ கைவிட்டுவிடுவாயோ? விட்டு விடாதே! எங்கும் பரவி ஒளிர்கின்ற தீப் பிழம்பை ஒத்துத் திகழ்பவனே! உலகமெல் லாம் ஒடுங்கும் பெரும் சுடுகாட்டுக்கு அரசனே! மெய்யடியார்க்கு அமுதம் போன்றவனே ! எவரும் தொடர்ந்து பற்றுவதற்கு இயலாத வனே! புகலற்றவனாகிய எளியேனின் தனிமைத் துன்பத்தை நீக்கியருளும் ஒப்பற்ற பெருந் துணையாக உள்ளவனே !

(39) ஒப்பற்ற பெரும் துணையாக நீ இருக் கவும், யான் எனச் செருக்குற்றுத் தலை கீழாக

நடந்த, வினையையே துணையாகக் கொண்ட சிறியேனை நீ கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! வினையை உடையவனுகிய என்னுடைய மனத்திற்குத் துணையாக உள்ளவனே! எனது வாழ்க்கைக்கு முதற்பொருளாக உள்ளவனே! எனக்கு இடர்ப்பாடு நேர்ந்த இடத்துப் பயன்படும் சேமப் பொருளாக இருப்பவனே! துன்பத்தைத் தருகின்ற உடம்பினது திண்ணிய வலையில் அகப்பட்டு வருந்தும் துன்பத்தினை, இனி நான் ஒரு தினையளவு நேரமேனும் பொறுத்துக் கொள்ளமாட்டேன்.

(40) வலையினிடத்தில் அகப்பட்டுக் கொண்ட, மானின் கண்களைப் போன்ற கண்களை உடைய பெண்களின் காமப் பார்வையாகிய வலையில் அகப்பட்டுக் கொண்டு, அதனுல், வெறி கொண்டு மயங்கித் திரிந்த, சிறியேனை நீ கைவிட்டு விடுவாயோ? வெண்மையான சந்திரனின் ஒரு கலையாகிய பிறையைத் தலையில் அணிந்தவனே? கருணைக்கு இருப்பிடமாகத் திகழ்பவனே! கயிலாயம் என்று புகழப்படும் மலையில் வீற்றிருக்கும் தலைவனே! மலைமகளாகிய பார்வதி தேவியின் கணவனே! என் வாழ்க்கைக்கு மூலகாரணனுக விளங்குபவனே!

(41) காமமாகிய வெந்நீரில் மூழ்கி, சிவந்த வாயினை உடைய பெண்களாகிய முதலை கடிப்ப, அதனுல் துன்பம் எய்துகின்ற சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! புலால் நாற்றம் மிக்க இறைச்சி செறிந்த, நோய்களைச் செய்கின்ற உடலைத் தாங்கல் ஆற்றேன்! சிவபெருமானே! இங்ஙனம் யான் துன்புறுமாறு நீ பார்த்துக் கொண்டிருத்தல் முறையாகுமா? அழகிய தேமல் படர்ந்த, அணிகலன் விளங்கும் தனங்களை உடைய, உமையம்மையை ஒரு பாகத்திற் கொண்டவனே! யான் அடையத் தகுந்த நற்பேருக‌த் திகழ்பவனே!

(42) உன்னையே புகலாக அடைந்த அடியவனுகிய எனக்கு உன் திருவடிகளை நீ வழங்கியருளியும், இவ்வூன் உடலைப் போக்காமைக்கு ஏதுவாகிய, கொடிய தலைவிதியை உடைய அடியேனை நீ கைவிட்டு விடுவாயோ? வெண்மையான தலை ஓட்டின் துளையில் பதிந்து தங்கு தலை உடைய, பளபளப்பு மிக்க பாம்பு, தன் படத்தைச் சந்திரனைப் பார்த்துச் சுருக்கிக் கொள்ள, அதனைச் சந்திரன் கண்டு அச்சமுற்றுக் கங்கை நீரில் முழுகி மறைகின்ற, சடைமுடியை உடைய அரசனே!

(43) அரசனே! நின்னேடு கலக்கும் நெறியை அறியாத சிறியவனுகிய எனக்கு, இன்ப விளக்கமாகத் திகழ்பவனே! நீ என்னைக் கைவிட்டு விடுவாயோ? விட்டுவிடாதே! சிறப்பு மிக்க வேதங்களையும், மெய்ம்மையாகிய சிவாகமங்களையும் சொல்லியருள்பவனே! சொற்களைக் கடந்து அப்பாற்பட்டவனே! என்றும் நீங்காத தொண்டினைச் செய்கின்ற, மெய்யன்பர்க்கு முன்னிற்பவனே! அவர்களுக்கு உற்ற துணையாகப் பின்னிற்பவனும், இவ்வெல்லாமும் ஆகி விளங்குபவனே!

(44) கூர்மையான வேல் போன்ற கண்களை உடைய பெண்கள் என்கின்ற பெரிய நெருப்பில், முற்றும் முழுகி அமிழ்ந்து போகின்ற வெண்ணெய் போன்ற சிறியேனை நீ கைவிட்டு விடுவாயோ? விட்டுவிடாதே! நின்னுடைய மணம் மிக்க மலர் போன்ற திருவடிகளை வணங்கி, ஞானப் பெருவெளியை நோக்கிச் செல்கின்ற அடியவர்களோடு, என்னைச் சேர்த்து விடுக! எங்கள் பெருமானே! நினக்கு வணக்கம். என்னை அடிமையாக உடையவனே! உன்னை எப்போதும் புகழ்ந்து பாடித் துதிப்பேன். குற்றங்கள் செய்கின்ற எளியேனைக் காவாமற் கைவிட்டுவிடாதே!

(45) மாணிக்க மணி போன்றவனே; நின்னைப் பாடினேன் இல்லை; நின்னை யான் வணங்கவும் செய்திலேன்; திருப்பெருந்துறையிற் காட்சியளித்து மறைந்த நின்பொருட்டு, என்னுடைய பசுமையாகிய ஊன் பொருந்திய உடலை, யான் வீழ்த்தி ஒழித்துக் கொண்டிலேன். இத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ? விட்டுவிடாதே! அப்பொழுதே நின் அருட்காட்சியைக் கண்டு வியப்புற்று, அதனை மீளவும், காண்டற் பொருட்டுச் "சிவபெருமான்

எவ்விடத்தில் இருக்கின்றான்? யாவர் பார்த்தனர்'' என்று வினவிக் கொண்டு, தேடிப் பிடிக்க ஓடினேன் இல்லை; நின் அருளையே நினைந்து கொண்டிருந்து உள்ளம் உருகினேன் இல்லை; வீணாக உயிர் நிலைபெற்று, உலக நுகர்ச்சி குறித்து உழைத்தே பொழுது போக்கினேன். (என் தீவினை இருந்தவாறுஎன்னே!)

(46) மானின் பார்வை போன்ற பார்வையினராகிய பெண்களின் தனங்களை, பலாப்பழத்தின்கண் மொய்க்கின்ற ஈயினைப் போல விரும்புகின்ற இழிந்த என்னை, நீ கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! கைவிட்டு விடுவாயாயின், கடலில் தோன்றிய நஞ்சை உண்டு நீலமேகம் போன்ற கழுத்தை உடையவன், குணம் இல்லாதவன், மக்கட்டன்மை உடையவன், குறைந்த அறிவினை உடையவன், பழைய பெரிய அயலவன் என்றெல்லாம் பலவகையில் எப்பொழுதும் நின்னைப் பற்றிப் பழித்துரைகளையே யான் கூறித் திரிவேன்.

(47) பழிக்கத் தகும் குற்றம் ஏதும் இல்லாத, நின்னுடைய திருவடிகளின்கண் பழமையாகிய தொண்டினை மேற்கொண்டு, பின்னர் அத்தொண்டு நழுவி விட்டதனால், அத்திரு வடியைப் பழித்துக் கொண்டே செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்ற சிறியேனை, நீ கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! வெண்மையான முத்துக்களை உடைய சங்குகளைத் திரட்டிக் குவித்து, சடையாகிய பெரிய அணையைப் பொருந்தி, மந்தார மலர்களை ஒதுக்குகின்ற, மந்தாகினி என்னும் கங்கையினது, வரம்புபட்ட நீர் நிலையில், பிறைச் சந்திரனாகிய தோணியானது சேர்கின்ற, மாலையை உடையவனே!

(48) தலையின்கண விண்மீன்களைப் போன்ற தலை மாலைகளையும், வெப்பம் மிக்க நஞ்சுடைய பாம்புகளாகிய அணிகலன்களையும் உடைய தெய்விகப் பெரு வீரனே! எளியேனைக் கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! கைவிடுவாயாயின் அறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் மிக்க பெரியோர் என்னை நோக்கி, 'நீ யாருடைய அடியவன்?' என்று வினவுவார்களாயின், திருவுத்தரகோசமங்கைக்கு அரசனாகிய சிவபெருமானுடைய, சிறப்புப் பொருந்திய அடியவர்க்கு அடியவன் என்று சொல்லி நின்னைக் குறித்து எல்லோரும் சிரித்துஇகழ்ந்து, ஏளனம் புரியும்படி செய்வேன்!

(49) வெறுக்கத்தக்க என் உலக வாழ்க்கையைஎள்ளிநகையாடச்செய்வேன்! தொண்டு பூண்டு ஒழுகுதலை இறைவனுக்கே என்று யாண்டும் பரவும்படி செய்வேன்! இத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ? விட்டு விடாதே! விடுவாயாயின் கொடிய யானையின் தோலைப் போர்த்த பித்தன்! புலித்தோலை உடுத்த பித்தன்! ஊருக்கு அப்பாலுள்ள சுடு காட்டுத் தீயில் கூத்தாடுகின்ற பித்தன்! தகுதியற்றவனாகிய என்னையும் ஆராயாமல் ஆட்கொண்டுவிட்ட பித்தன்! என்று பலவாறு இகழ்ந்துரைப்பேன்!

(50) பழித்து உரைத்தாலும், அல்லது உன்னைப் புகழ்ந்து உரைத்தாலும், யான் என்னுடைய பிழையையே நினைந்து நினைந்து, உள்ளம் குழைவுற்றுக் கரைந்து உருகி மிகவும் வருந்துவேன்! அத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ! விட்டுவிடாதே! செந்நிறமுடைய பவளமலை போல. ஒளிவிடுகின்ற திருமேனியை உடையவனே! எளியேனையும் ஆளாகக் கொண்டவனே! சிற்றுயிர்களாகிய தேவர்களின் பொருட்டு இரக்கங்கொண்டு, கொதித்து எழுகின்ற ஆலாலம் என்னும் கொடிய நஞ்சை (முன் வந்து) உண்டருளியவனே! அமிழ்தம் உண்ணுதலில் இறுதியாக இருந்தவனே!

முடிவுரை :

இறைவனது அருளைப் பெற விரும்பும் அன்பர்கள் அனைவராலும், 'பெருமானே! எளியேனைக் கைவிட்டு விடாதே. காப்பாற்றியருள்க' எனப் பலகாலும் பாடிக் கசிந்துருகிக் கதறியழுது வேண்டுதல் செய்து கொள்வதற்கு ஏற்றபடி அமைந்துள்ள, உருக்கம் மிக்க இந்த நீத்தல் விண்ணப்பத் திருப்பாடல்களை நாம் அனைவரும் அன்புடன் இடையறாது நயந்தினிது ஓதி, நலங்கள் பலவும் பெற்று உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

ஸ்ரீவைஷ்ணவத் திவ்விய தேசங்கள்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

(முற்றொடர்ச்சி)

சோழநாட்டு திருப்பதிகள் :

1. திருவரங்கம்:

திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் தலைமை பூண்டது. சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் முதன்மை வாய்ந்தது. கோயில் என்றும், பெரிய கோயில் என்றும் வழங்கப்படுவது. பூலோக வைகுண்டம் என்ற மறுபெயர் கொண்டது. போக மண்டபம் எனப் புகழப்படுவது, பிரணவ வடிவமான ஸ்ரீரங்க விமானத்தில், ஆதிசேடசயனத்தில் பள்ளி கொண்டருளும் திருமால், முதலில் சத்திய லோகத்தில் பிரமனது திருவாராதனத் திருவுருவமாக இருந்தார். பின்பு சூரிய குலத்து மனுகுமாரன் ஆன இட்சுவாகு வேந்தன், பிரமனைக் குறித்துப் பலகாலம் அரும்பெரும் தவம் புரிந்து அத்தேவனின் அருளால், இவரைத் திருவயோத்திக்குக் கொண்டு வந்து அமைத்துத் திருவாராதனம் செய்து வந்தான். இட்சுவாகு முதல் இராமபிரான் வரையில் இருந்த, சூரிய குல மன்னவர் எல்லார்க்கும் குல தெய்வமாக விளங்கியதனால், திருவரங்க நாதனுக்குப் பெரிய பெருமாள் என்று பெயர். இராமபிரான் இராவணவதம் செய்து, அயோத்திக்கு மீண்டு முடிசூடிக் கொண்டு, சுக்கிரீவன் முதலிய அனைவர்க்கும் விடைகொடுத்து அனுப்பிய பொழுது, தனது குலதனமும் திருவாராதனமூர்த்தியுமான ஸ்ரீரங்கநாதனை விபீஷணனிடம் கொடுத்து, ஆராதித்து வருமாறு பணித்தான். அங்ஙனமே விபீஷணன், திருவரங்க நாதனின் திருவுருவத்தை எடுத்துக் கொண்டு, இலங்கை நோக்கிச் செல்லுங்கால், வழியில் இருகாவிரிகளின் இடையிலே புடைபெயராது விமானத்துடன் நிலை நின்றருளிய தலம். ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் சூரியமண்டலம் யோகிகளின் உள்ளக் கமலம் ஆகிய இவையனைத்தினும், இனியது என்று எம்பெருமான் உவந்து எழுந்தருளியிருக்கும் இடமாதல் பற்றி, ரங்கம் என்று இவ்விமானத்திற்குப் பெயர். 'ஸ்ரீ' என்னும் திருமகள் நிருத்தம் செய்யும் இடமாதல் பற்றியும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய மேன்மை ஆகிய திரு கூத்துப் பயில்கின்ற இடமாதல் குறித்தும், இரண்டு ஆறுகளுக்கு இடையே உள்ள திடர் ஆதல் காரணமாகவும், இதற்குத் திருவரங்கம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. சாளக்கிராமம், வானமாமலை, நைமிசாரணியம், பதரிகாச்சிராமம், திருவேங்கடம் புஷ்கரம், ஸ்ரீ முஷ்ணம், திருவரங்கம் என்னும் சுவயம் வியக்த க்ஷேத்திரங்கள் எட்டினுள் ஒன்று. திருவரங்கநாதன் பெரிய பெருமாள், நம்பெருமாள், அழகிய மணவாளன், சேஷ சயனத் திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம், ஸ்ரீரங்கநாயகித் தாயார், திருமால் நாச்சியார் பிரணவாகார விமானம், காவேரி நதி, சந்திர புஷ்கரிணி முதலிய நவதீர்த்தங்கள். புன்னைமரம். தர்மவர்மா, ரவி வர்மன்

காவேரி, விபீஷணன் சந்திரன் முதலியவர்களுக்குப் பிரத்தியட்சம், ஆழ்வார்களுக்குள் மதுரகவி தவிர மற்றைய பதினெருவரும் பாடியது. இராமாநுசரும் வேதாந்த தேசிகரும் வாசம் செய்தருளிய தலம்.

2. உறையூர் :

இது கோழி எனவும், நிசுளாபுரி எனவும் வழங்கும், திருச்சிராப்பள்ளிக் கோட்டை நிலையத்தில் இருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. அழகிய மணவாளன். வாசலட்சுமி, உறையூர் வல்லி, கல்யாண விமானம், சூரிய புஷ்கரிணி, குடமுருட்டி நதி, வடக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், பிரயோகச் சக்கரம். ரவி தர்மராசனுக்கும், கோடி தேவர்களுக்கும் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் கோழி என்ற பெயரால் மங்களாசாசனம். ஒரு பெரிய யானையோடு போர் செய்து, கோழி வெற்றி கொண்ட இடமாகும் காரணம் பற்றி, இதற்குக் கோழி என்றே பெயர் அமைந்தது. ''கோழியும் கூடலும் கோயில்கொண்ட கோவலரே ஒப்பர்'' (1762) என்பது கலியன்பாசுரம், ''முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய புறஞ்சிறை வாரணம்'' எனச் சிலப்பதிகாரம் இதனைக் குறிப்பிடுகின்றது. ''ஊர் எனப்படுவது உறையூர்'' என்னும் தொடரை நக்கீரர் தமது களவியலுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். திருப்பாணாழ்வார் அவதாரத் தலம், திரு உறைந்த காரணம் பற்றித் திருவுறையூர்எனப் பெற்றது. உறையூர் உறந்தை எனவும் மருவி வழங்கும். இஃது அழகிய மணவாளனுக்கும், உறையூர் வல்லிக்கும் திருமணம் நிகழ்ந்த தலம்.

3. தஞ்சைமாமணிக்கோயில் :

இது தஞ்சையாளி, மணிக்குன்றப் பெருமாள் என்னும் இரண்டு சந்நிதிகளைக் கொண்டது. தஞ்சாவூர்க்கு வடக்கே இரண்டு கல் தொலைவில் விண்ணாற்றங்கரை என்னும் இடத்தில் இருப்பது. நீலமேகப் பெருமாள், செங்கமலவல்லி சௌந்தரிய விமானம். கன்னிகா புஷ்கரிணி, அமிர்தநதி. வீற்றிருந்த திருக்கோலம். பராசர முனிவருக்குப் பிரத்தியட்சம், தஞ்சையாளி, நரசிம்மன், தஞ்சை நாயகி. வேதாந்தவிமானம், சூரியபுஷ்கரிணி, வீற்றிருந்ததிருக்கோலம். மணிக்குன்றப் பெருமாள், ஸ்ரீராமதீர்த்தம்.

திவ்வியப் பிரபந்தம் சேவிக்கக் கூடாத காலத்தில் எல்லாத் திவ்விய தேசங்களிலும் தேசிகப் பிரபந்தத்தைச் சேவிக்க வேண்டும் என்று, சுவாமி தேசிகனின் திருக்குமாரர் ஆகிய நயினராசார்ய சுவாமி, இந்தத் திவ்விய தேசத்திலேயே நியமித்தருளினர். தஞ்சன் என்னும் அசுரனைக் கொன்ற தலம் ஆதலின், தஞ்சை எனப் பெயர் பெற்றது. ''தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி நம்பிரான் நான் உய்யக் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்'' என்று திருமங்கையாழ்வாரும், ''தடம்பருகு திருமுகிலைத் தஞ்சைக் கோயில் தவநெறிக் கோர் பெருநெறியை'' என்று பூதத்தாழ்வாரும் பாடிப் போற்றிய தலம்.

4. அன்பில் :

திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள லால்குடி நிலையத்தில் இருந்து கிழக்கே ஐந்துகல் தூரம். திருச்சியில் இருந்து உந்தூர்தி உண்டு. வடிவழகிய நம்பி. அழகிய வல்லித் தாயார். தாரக விமானம். புஷ்கரணி புஜங்க சயனம் தெற்கே திருமுக மண்டலம், பிரம்மாவுக்கும் வால்மீகிக்கும் பிரத்தியட்சம். திருமழிசையாழ்வார் மங்களாசாசனம். ''நாகத்தணை அரங்கம் பேர் அன்பில்'' என்பது திருமழிசை யாழ்வார் பாசுரப்பகுதி (241). அடியவர்கள் பக்கல் அன்பே வடிவமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாதலின், அன்பில் எனப் பெற்றது.

5. கரம்பனூர் :

திருச்சிராப்பள்ளிக் கோட்டை நிலையத்தில் இருந்து, வடக்கே ஐந்துகல் தொலைவு. உத்தமர் கோயில் என வழங்கும். புருஷோத்தமன்

பூர்வாதேவி, உத்தியோக விமானம். கதம்ப தீர்த்தம், வாழைமரம், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம். கதம்ப முனிவர், உபரி சரவசு, சனகர் சநந்தனர் சநற்குமாரர் ஆகியோர்க்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். கதம்ப முனிவருக்குப் பிரத்தியட்சமான தலம். கதம்பனூர் என்பது கரம்பனூர் என மருவியது என்பர். ''பேரானைக் குறுங்குடி எம்பெருமானைத் திருத்தண்கால் ஊரானைக் கரம்பனூர் உத்தமனை'' என்பது திருமங்கை ஆழ்வார் பாசுரம்''.

6. திருவெள்ளறை :

திருச்சியில் இருந்து துறையூருக்குச் செல்லும் வழியில் உள்ளது. புண்டரீகாட்சன். பங்கயச் செல்வி, சம்பகவல்லி விமலாகிருதி விமானம், குசதீர்த்தம் மணிகர்ணிகைத் தீர்த்தம் சக்கரதீர்த்தம் புஷ்கலதீர்த்தம் பதுமதீர்த்தம். வராகதீர்த்தம். திவ்விய புஷ்கரிணி, கந்த புஷ்கரணி, சுவேதகிரி. நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம். பெரிய திருவடி, சிபிச்சக்கரவர்த்தி, பூதேவி, மார்க்கண்டேயர் இலட்சுமி பிரம்மா உருத்திரர் ஆகியவர்களுக்குப் பிரத்தியட்சம். உய்யக் கொண்டார், எங்களாழ்வான் திருவவதாரத்தலம். பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் பாடல், வெண்மையான அறை (பாறை) களால் இயன்ற மலை ஆதலின், திருவெள்ளறை எனப் பெற்றது. வடமொழியில் சுவேதாத்திரி என்பர். ''நல்லார்கள் வெள்ளறை நின்ருய் ஞானச்சுடரே உன்மேனி, சொல்லார வாழ்த்தி நின்றேத்திச் சொப்படக் காப்பிட வாராய்'' என்பது பெரியாழ்வார் பாசுரம்.

7. புள்ளம்பூதங்குடி :

சுவாமிமலையில் இருந்து இரண்டரை கல் கும்பகோணத்தில் இருந்து உந்தூர்தியிற் செல்லலாம். வல்வில் இராமன், பொற்ருமரையாள், சோபன விமானம், புஜங்க சயனம், சடாயு தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், ஜடாயுவுக்கு மோட்சம் தந்த தலம் ஆதல்பற்றிப் புள்ளம் பூதங்குடி எனப் பெயர் அமைந்தது. தொண்டரடிப் பொடியாழ்வார் அவதாரத் தலமான மண்டங்குடி இந்தத் திவ்விய தேசத்தின் அருகில் உள்ளது. சக்கரவர்த்தித் திருமகனுக்கும் ஜடாயுவுக்கும் பிரத்தியட்சம், திருமங்கையாழ்வார் பாடல், ''வெற்பால் மாரி பழுதாக்கி விறல் வாள் அரக்கர் தலைவன்றன், வற்பார் திரள் தோள் ஐந்நான்கும் துணித்த வல்வில் இராமன் இடம்'' என்பது பாசுரம்.

8. திருப்பேர் நகர் :

இது கோயிலடி என வழங்கும். லால்குடி நிலையத்தில் இருந்து ஆறுகல், அப்பக்குடத்தான், இந்திரா தேவி, இந்திர விமானம். திருக்காவேரி, புஜங்க சயனம், மேற்கே திருமுக மண்டலம், உபமன்னிய முனிவருக்கும் பராசரருக்கும் பிரத்தியட்சம், பெரியாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கை யாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாசனம்.

9. ஆதனூர் :

சுவாமிமலை நிலையத்தில் இருந்து இரண்டு கல். ஆண்டளக்கும் ஐயன், ஸ்ரீரங்கநாயகியார் பிரணவவிமானம், சூர்யபுஷ்கரிணி, புஜங்க சயனம், கிழக்கே திருமுகமண்டலம், காமதேனுவுக்கும், திருமங்கையாழ்வாருக்கும் பிரத்தியட்சம், காமதேனுவுக்குப் பிரத்தியட்சமான தலமாதல்பற்றி இதற்கு ஆதனூர் எனப்பெயர் அமைந்தது. (ஆ—பசு, காமதேனு), ''அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை'' என்பது திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமடல் (130). கருப்பக் கிரகத்தில் திருமங்கையாழ்வார் திருவுருவம் உள்ளது.

10. திருவழுந்தூர் :

இது தேரழுந்தூர் எனவும், அழுந்தூர் (அழுந்தை) எனவும் வழங்கும். ஒரு சிலர் திருவிழந்தூர் எனத் தவருக வழங்குவர். மாயூரம் கும்பகோணம் பிரிவில் குற்ருலம் நிலையத்திற்கு அடுத்தது. ஆமருவியப்பன், செங்கமல வல்லித் தாயார், கருட விமானம். தர்ச புஷ்க

ரிணி, கிழக்கே திருமுகமண்டலம், நின்ற திருக் கோலம், தனது தவவலிமையால் விமானத்தில் வானவெளியிற் செல்லும் தன்மையனுன உபரி சரவசு என்னும் அரசன், தேவர்கட்கும் முனிவர் கட்கும் நேர்ந்த ஒரு வழக்கில் ஒரு தலைப்பக்க மாகத் தீர்ப்புச் சொல்லியதனுல், முனிவர் களால் சாபம் பெற்றுப் பூமியில் விழுகையில், அவனது தேர் அழுந்தப் பெற்ற இடமாதல் பற்றி, இதற்கு அழுந்தூர் எனப் பெயர் அமைந்தது. உபரிசரவசு, காவேரி, தரும தேவதை, அகத்தியர், மார்க்கண்டேயர், கருடன் ஆகியோர்க்குப் பிரத்தியட்சம், பெரு மாள் சாளக்கிராம ரூபியாய் நின்ற திருக் கோலத்தில் காட்சியளிக்கின்ருர். கிழக்கே திருமுகமண்டலம், திருவுருவம் சுமார் பத்து அடி உயரம் இருக்கும். கருவறையில் பெரு மாளுக்கு வலதுபுறம் மார்க்கண்டேயர் படிமம் உள்ளது.

கோகுலத்திற் கண்ணபிரான் மேய்த்துக் கொண்டிருந்த பசுக்களைப் பிரமன் இங்கு ஓட்டி வந்து மறைத்து வைத்துக் கண்ணபிரானை இங்கு வந்து கோயில் கொண்டிருக்க வேண்டும் என்று விண்ணப்பித்தான். இதன்படி கண்ண பிரான், இங்கு வந்து கோயில் கொண்டான். அதனுல் ஆமருவியப்பன் எனப் பெயர் பெற் ருன். இதற்குச் சான்ருக உற்சவருக்குப் பின்னுல்பசு ஒன்றும், முன்னுல் கன்று ஒன்றும் நிற்பதுபோல் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ''ஆமருவி நிரை மேய்த்த அமரர் கோமான் அணியழுந்தூர் நின்ருன்'' என்பது திருநெடுந் தாண்டகம்.

இங்குதான் கம்பராமாயணம் பாடிய கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் பிறந்தருளினுர். கம்பர் சந்நிதி இங்கு உள்ளது. கோயிலுக்குத் தெற்கே சிறிது தொலைவில், கம்பன்மேடு என்னும் ஒரு பெரிய திடல் 15 அடி உயரத்தில் உள்ளது. அதற்கு அருகே கம்பர் வழிபட்ட தாகக் கூறப்பெறுகின்ற காளி கோயில் ஒன்றும் உள்ளது. கம்பன் மேட்டைச் சுற்றியுள்ள நன் செய் நிலத்துக்குக் கம்பன் பட்டம் என்னும் பெயரே வழங்கிக் கொண்டு இருக்கிறது. கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த வெண்ணெய் என்னும் ஊர், கதிராமங்கலம் என்பது சுமார் ஆறு கல் தொலைவில் உள்ளது. இத்தலம் முதற் கரிகாலனின் தலைநகராக விளங் கியது. அவனது படைத்தலைவன், அறமன்றத் தலைவன் அழுந்தூர் வேள் என்பவன் ஆவன். மற்றும் கரிகாலனுடைய தாய்மாமன் ஆகிய இரும்பிடர்த் தலையார் என்ற பெருந்தமிழ்ப் புலவர், இவ்வூரில் வாழ்ந்தவரே யாவார்.

11. சிறுபுலியூர் :

திருச்சி மாவட்டம் கொல்லுமாங்குடி நிலையத்தில் இருந்து ஒரு கல். அருமாகடல், திருமாமகள் நாச்சியார், நர்த்தன விமானம். அநந்த சுரசு, மானச புஷ்கரிணி, தெற்கே திருமுகமண்டலம், புஜங்க சயனம், ''திருமா மகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து அருமா கடல் அமுதே உனது அடியே சரண் ஆமே'' என்பது திருமங்கையாழ்வார் மங்களாசாசனப் பகுதி.

பெருமாள் புலிக்கால் முனிவர் என்னும் வியாக்கிரபாத மகிரிஷிக்குப் பால சயனமாய்ச் சேவை சாதித்த தலமாதலின், இதற்குச் சிறுபுலியூர் என்பது பெயராயிற்று.

12. திருச்சேறை :

கும்பகோணம் நிலையத்தில் இருந்து தென் கிழக்கில் ஏழு கல். சாரக்ஷேத்திரம், சாரநாதப் பெருமாள், சாரநாயகி, சாரவிமானம், சார புஷ்கரிணி, கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம், காவேரிக்கும் மார்க்கண்டேய முனிவருக்கும் பிரத்தியட்சம். ''தண்சேறை எம் பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலை மேலாரே'' என்பது திருமங்கையாழ்வார் பாசுரம்.

இத்தலத்தில், பெருமாள் நாச்சியார் விமானம் தீர்த்தம் நிலம் என்னும் ஐந்தும் சார முள்ள பொருள்களாய் அமைந்திருத்தலால், திருச்சேறை எனப் பெயர் வந்தது. வட மொழியில் பஞ்சசார க்ஷேத்திரம் என்பர். இங்ஙனம் சாரமுடைய பொருள்களையுடைய இத்தலத்தில், காவேரி நதி தவஞ்செய்து கங்கை நதியைக் காட்டிலும் சிறப்புப் பெற்றனள் எனத் தலபுராணம் கூறும். 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்பது கம்பர் வாக்கு.

(தொடரும்)

வாரணவாசி

திரு கே. எம். வேங்கடராமையா, M. A., திருப்பனந்தாள்

வாரணவாசி - வாரணசி:

வாரணவாசி என்று கூறியதும், வாரணசி என்ற சொல் நினைவுக்குவரும். வாரணவாசி வேறு; வாரணசி வேறு. வாரணசி என்பது காசியைக் குறிக்கும். வாரண அசி என்ற இரு சொற்களும்சேர்ந்து தீர்க்க சந்தி பெற்று வாரணசி என்றாகும். வாரண அசி என்ற இரு துறைகட்கு இடைப்பட்டவூர் என்பது பொருள். ஆனால் வாரணசியிலும் வேறுபட்டதாகிய வாரணவாசி என்பதுபற்றி, இலக்கியங்களிலும் கல்வெட்டிலும் பயின்றுள்ளவற்றை அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிஞ்சிக்கலியில் :

கலித்தொகை என்ற சங்க மருவிய எட்டுத்தொகை நூலில் ஒருபகுதி குறிஞ்சிக்கலி. இது 29 பாடல்களையுடையது. இதில் 24 ஆவது பாடலில், பின்கண்ட வரிகளில் வாரணவாசி என்பது பயின்றுள்ளது.

''தெருவின்கண்,
காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ,
வாரண வாசிப் பதம்பெயர்த்தல்! ஏதில
நீநின்மேற் கொள்வது; எவன்?''

''நம்மிடத்தில் யாதொரு காரணமும் இல்லாதிருக்கத் தெருவின்கண் யாரோசிலர் கலங்குவதைக் கண்டு, நீ உனக்குத் தொடர்பில்லாதனவற்றை நீ உன்மேல் ஏற்றுக்கொள்வது, எதுபோல் இருக்கிறது என்றால், வாரணவாசியிலுள்ளாரது ஒழுக்கம்போல் காணப்படுகிறது'' என்பது இவ்வரிகளின் பொருளாகும். ''வாரணவாசிப்பதம்'' என்பதற்கு நச்சினார்க்கினியர் ''பிறர்வருத்தம் தம் வருத்தமாகக் கொண்டு ஒழுகுவதனை வாரணவாசியிலுள்ளார் பதம்'' என்று குறிப்பு வரைந்திருக்கிறார். இதனால் வாரணவாசி என்பது ஓரூர் என அறியக் கிடக்கிறது.

குலோத்துங்க சோழனுலா:

இவ்வுலா இரண்டாம் குலோத்துங்கன் பேரில் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது. இரண்டாம் குலோத்துங்கன், ''விக்கிரம சோழனுடைய மகன்-மேகம் போன்ற நிறத்தையுடையவன்-துவராபதியில் சந்திர குலத்தில் தோன்றி மனுகுலத்தை வாழ்விக்க வந்தவளைப் பெற்ற வாரணம் என்பானது மகள் வயிற்றுப் பேரன் கனகளபன்'' என்று பின்வரும் குலோத்துங்க சோழனுலாக் கண்ணிகளினின்றறியலாம்,

''பெரும்பரணி கொண்ட பெருமான்—தரும் புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்; குவலயங்கள்

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீ நறும்பூநாத சுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழாவில் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் **திரு. கே. வி. சுப்பையா, B. A.,** அவர்களும், **திரு. இரத்தினவேல் பாண்டியன், M.L.A.,** அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.
(15 - 4 - 70).



திருவிடைமருதூர்க் கும்பாபிஷேக விழா மலர் வெளியீட்டு விழாவில், திருவிடைமருதூர்க் கோயில் கண்காணிப்பாளர் திரு. டி. என். அருணசலம் பிள்ளை, B.A., B.L. அவர்கள், வரவேற்புரை நிகழ்த்துதல்.

முற்றப் புரக்கும் முகில்வண்ணன்;
பொற்றுவரை
இந்த மரபில் இருக்கும் திருக்குலத்தில்
வந்து மனுகுலத்தை வாழ்வித்த
—பைந்தளிர்க்கை
மாதர்ப் பிடிபெற்ற வாரணம்; அவ்வார
ணத்தின்
காதற் பெயரன்; கனகளபன்.''

இதில் ''கலிங்கப் பெரும்பரணி கொண்ட பெருமாள்' என்பது விக்கிரம சோழனைக் குறிக்கும். இவ்வரிகளுக்குரிய பழையவுரையில், ''மாதர்ப்பிடி-பெண்சக்கரவர்த்தி. வாரணம்-பெண்சக்கரவர்த்தியின் பிதா; அவர் யோகீசுவரரான காலையிற் பேர், வாரணவாசித் தேவர்'' என்பது காணப்படுகிறது. இவ்வுரைக்கு எழுதப்பெற்ற குறிப்புரையில், ''வாரணவாசி - இப்பெயருள்ளவூரொன்று அரியலூருக்குத் தென்பாலுள்ளது'' என்று உள்ளது. இதனுல் வாரணவாசி என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர்க்கு அருகில் இருக்கும் ஊர் என்றறியலாம்.

வாரணவாசி நாடு*

கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும், புறத்தாயநாடு என அழைக்கப்பெற்றது. அது முறத்தாயநாடு எனவும் கூறப்பெற்றது. இந்நாடு வாரணவாசி நாடு என்று பெயர் பெற்றிருந்தது என்பதைப் பின்வரும் சாசனப்பகுதி கூறும்; ''ஸ்வஸ்திஸ்ரீகொல்லம் 376-வது மேட நாயிற்று 21 சென்ற சனி யாண்ட மகத்துநாள் ஸ்ரீபாண்டிய நாட்டுப் புறத்தாய நாடான தென்வாரண வாசி நன்னுட்டுக் குமரி கன்னியாபகவதியார் கோயிலில்......'' இது கி.பி. 1231க்குரிய கன்னியா குமரிக் கல்வெட்டு (2) புறத்தாய நாட்டுக்குத் தென் வாரணவாசி நாடு என்ற பெயருண்மையை இக்கல்வெட்டுக் கூறியிருக்க, அகத்தீசுவரம் பாறைக் கல்வெட்டு (3) தென் வாரண வாசி நாட்டைப் புறத்தாய நாட்டின் ஒரு பகுதியாகக் கூறுகிறது. அச் சாசனப்பகுதி பின் வருமாறு:

''ஸ்வஸ்திஸ்ரீ அருளிச் செய்கை. புறத்தாய நாட்டுத் தென்வாசி வாரண நன்னுட்டு அகத்தீசுவரமான உதயமார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலத்து.....'' (தென் வாரணவாசி' என்பது இக்கல்லெழுத்தில் 'தென்வாசி வாரணம்' என்று மாற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே இரண்டாம் குலோத்துங்க சோழனின் பாட்டனர் பெயர் வாரணம் என்பதாகும். அவர் யோகிருந்த பின்னர் வாரண வாசித் தேவர் என அழைக்கப்பெற்றுர். அவர் பெயரால் வாரணவாசி என்ற ஊர் அமைக்கப்பெற்றது. இரண்டாம் குலோத்துங்கன் குமரிப் பகுதிக்குத் தன் பாட்டன் பெயரை இட்டனன் என்பனவற்றை அறியலாம். (சங்கப்பாடலில் கூறப்பெற்ற வாரணவாசி இதனின் வேருதல் வேண்டும்).

வாரணவாசி யாறு:

திருவதிகைக்கு அருகில் செல்லும் யாற்றை வாரணவாசியாறு என்ற பெயரால் மூன்றும் இராசராச சோழனுடைய திருவயிந்திரபுரக் கல்வெட்டு (4) உணர்த்துகின்றது. மூன்றும் இராச ராச சோழன் அரசனுனதும், கி.பி.1219-இல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பான் சோழநாட்டின்மேல் படையெடுத்து வந்து, சோழநாட்டில் பல அழிவு வேலைகளைச் செய்து, சோழ நாட்டைத் தனதாக்கிப் பின் பொன்னமராவதியில் தங்கியிருந்து, இராச

குறிப்பு: 'மாதர்ப்பிடி பெற்ற வாரணம்; அவ்வாரணத்தின் காதற் பெயரன் கனகளபன்' என்பதற்கு ''அழகிய பிடிபோன்ற விதுகுல நாயகி பெற்ற யானை போன்றவன்; அவ் யானைக்குரிய சிறப்புப் பெயராகிய களகளபம் என்னும் பெயரினையுடையவன் (அல்லது) அவ் யானையின் விருப்பமான கனகளபன் என்ற பெயருடையவன்'' என்றும் பொருள் கூறுவர். குலோத்துங்கனின் தாய் ''விதுகுல நாயகி'' ஆவள் என்று, குலோத்துங்க சோழனுலா 112-ஆம் கண்ணி(224-ஆம் வரி)யில் கூறப்பெற்றுள்ளது, (குலோத்துங்க சோழனுலா பக்கம் 69 - கழக வெளியீடு). இப்பிறருரை ஈண்டைய ஆய்வுக்கு வேண்டியதன்று.

ராசனையழைத்து அவனுக்குச் சோணாட்டை வழங்கினன். மீண்டும் கி.பி, 1231-இல் இம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இரண்டாவது தடவை சோணாட்டின் மேல் படையெடுத்து வந்தான். மூன்றும் இராச ராசன் தோற்று வடக்கு நோக்கி யோடினன். அப்பொழுது கோப்பெருஞ்சிங்கன் என்பான், சோழனைத் தெள்ளாறு என்ற ஊரில் போரில் வென்று, தன் தலைநகராகிய சேந்தமங்கலத்தில் சிறையிட்டான். இதனைக் கேள்வியுற்ற போசள மன்னன் வீரநரசிம்மன், கோப்பெருஞ்சிங்கனது நாட்டை அழிவுக்குட்படுத்தி, அவனை அஞ்சுவித்து, மூன்றும் இராச ராச சோழனை விடுவித்தான். இங்ஙனம் இராச ராசனைச் சிறையினின்று மீட்ட வரலாறு திருவயிந்திரபுரக் கல்வெட்டால் அறியவருகின்றது. அதில் போசள வீரநரசிம்மனின் தண்டநாயகன், ''திருவதிகை திருவக்கரை உள்ளிட்ட ஊர்களும் அழித்து, வாரணவாசி ஆற்றுக்குத் தெற்கு, சேந்தமங்கலத்துக்குக்கிழக்கு, கடலிலே அழிவூர்களும் குடிகால்களும் சுட்டும் அழித்தும்'' கொள்ளை கொண்டான் என்ற கல்வெட்டுப் பகுதியில் வாரணவாசியாறு என்று ஒரு ஆறு குறிக்கப்பெற்றுள்ளது. இதனைக் கெடில ஆறு என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். (5) திருக்கெடிலத்துக்கு வாரணவாசியாறு என்று பெயர்வரக் காரணம் சரியாகத் தெரிந்திலது. வாரணசி என்பதை வாரணவாசி என்று தவருகக் கொண்டார்களோ என்று தோன்றுகின்றது. திருநாவுக்கரசர் திருக்கெடிலத்தைத் ''தென்திசைக் கங்கைய தெனப்படும் கெடிலம்'' என்று கூறுவர். சேக்கிழாரும், 'தென்திசையில் கங்கை யெனும் திருக்கெடிலம்' என்பர். ஆகவே கெடிலயாறு வாரணசியாறு என்று தொன்று குறிக்கப்பட்டுப் பின் தவருக வாரணவாசி என்று குறிக்கப்பட்டதாதல் வேண்டும்.

வயலைக் காவூரில் :

வயலைக்காவூர் என்பது காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள ஒரூர். வாரணவாசி யுடையான் களப்பாளன் என்பான் அவ்வூர்க் கோயிலைக் கற்றளியாக அமைத்து மண்டபம் கட்டிக் குடமுழுக்கு நடத்தி, விளக்கெரிக்க ஒரு மாடை (பொன்) அளித்தனன் என்று மூன்றும் இராச ராச சோழனது 27-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று (6) உணர்த்துகின்றது.

சகல புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்க தேவருடைய 16ஆவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டும், (7) வயலைக் காவூரிலிருந்த கோயிலுக்கு வாரணவாசீச்சுவரமுடையார் கோயில்* என்பது பெயர் என்றும், இசையூர் பலகண்ணன் தழுவக் குழைந்தான் திருவீழிமிழலையுடையான் என்பான் ஒருவன் ஒருசந்தி விளக்கு எரிக்க ஸ்ரீவாரணவாசீச்சுரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணனிடத்தில் ஒருமாடை (பொன்) அளித்தனன் என்றும் கூறுகிறது.

சிதம்பரத்தில்:

கோப் பெருஞ்சிங்கனது 10'-ஆவது ஆட்சியாண்டுக்குரிய சிதம்பரக் கல்வெட்டு (8) வாரணவாசி மகாதேவர் கோயில் என்று ஒரு கோயிலைக் குறிப்பிட்டுப் பிடாரியார் கோயில் கட்டுவதற்குச் சோழக் கோனர்க்கு நிலம் விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

கோப்பெருஞ்சிங்கனது 10-ஆவது ஆட்சியாண்டுக்குரிய இன்னொரு சிதம்பரக் கல்வெட்டு (9) சோழர்கோன் என்பானின் ஓலை (உத்தரவு) ஆகும். அதில் பிடாரி திருச்சிற்றம்பலமாகாளி கோயில் இருக்கும் பகுதியாகிய விக்கிரம சோழநல்லூரில் உள்ள 140. 7/8 குழி நிலத்துக்குப் பதிலாக வாரணவாசி மகாதேவர் கோயில் தானத்தார் பக்கல் 141 குழி நிலத்தைப் பெற்றுக்கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பிடாரியார் கோயில், நாயகர் (நடராசப் பெருமான்) திருக்கடலுக்கு எழுந்தருளும் திருவீதியாகிய விக்கிரமசோழன் தெற்குத் திருவீதிக்குத் தெற்கில் அமைந்திருந்தது. பதிலாய் பெற்ற நிலம் விக்கிரமசோழன் தெற்குத் திருவீதிக்குத் தெற்கிலும், வாரணவாசி மகாதேவர் திருக்குளத்துக்கும் திருநந்தனவனத்துக்கும் திருமடவிளாகத்துக்கும் கிழக்கிலும் இருந்தது.

தொகுப்புரை :

இதுகாறும் கூறியவாற்றால் 'வாரணவாசி' யென்பது சங்க காலத்திருந்த ஓரூர் என்றும், 'வாரணம்' என்பது இரண்டாம் குலோத்துங் கனது பாட்டன் பெயர் என்றும், அவர் யோகீசுவரரான காலையில் 'வாரணவாசித் தேவர்' எனப் பெற்றார் என்றும் அவர் பெய ராலும் வாரணவாசி என்றோரூர் அமைக்கப் பெற்றதென்றும், கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் 'வாரணவாசிநாடு' எனப் பெற்றது என்றும், திருவதிகைக் கருகில் ஓடும் கெடில யாற்றுக்கு 'வாரணவாசியாறு' என்ற பெயரும் இருந்தது என்றும், வயலைக்காவூர் என்ற ஊர்க் கோயிலுக்கு 'வாரணவாசீசுவரமுடையார் கோயில்' என்பது பெயர் என்றும், அவ்வூர்க் கோயிலைக் கற்றளியாக்கியவர் 'வாரணவாசி யுடையான் களப்பாளன்' என்ற பெயரினன் என்றும், சிதம்பரத்திலும் தில்லைக் காளி கோயி லுக்கருகில் 'வாரணவாசி மகாதேவர் கோயில்' என்ற பெயரில் ஒரு கோயில் இருந்ததென்றும் அறியப்பெறும்.

*வயலைக்காவூர்க் கோயிலில் நந்திவர்ம பல்லவனுடைய இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுளது. அதில் இறைவன், "பட்டாரர்" எனப் பெற்றார். இந்நாளில் அக்கோயில் வாரு தீசுவரர் கோயில் எனப் பெறுகிறது.

(1) சேரநாடும் செந்தமிழும், பக்கம் 136-137
(2) T.A.S. vol, IV, p. 65
(3) Kerala Society Papers Vol I, p. 264
(4) 142 of 1902; E. I. VII, p. 167-8,
(5) K.A.N. Cholas, II p. 182.
(6) 254 of 1922.
(7) 255 of 1922; 197 of S.I.I. vol. XII.
(8) 401 of 1903
(9) 312 of 1913; 159 of S.I.I. Vol. XII.

பொள்ளாச்சித் தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் B.Sc., M.S.E., அவர்கள் கும்பாபிஷேக விழா மலரை வெளியிட்டு உரை நிகழ்த்துதல்.

அபிராமி அந்தாதி

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

(முற்றொடர்ச்சி)

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப், புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதந்தருமே.

(பொழிப்புரை) மென்மையான நுண்ணிய இடையை உடைய மின்னற் கொடி போன்றவளும், விரிந்த சடை முடியை உடைய சிவபெருமான் தழுவிய மெல்லிய தனங்களின் நிறம் பொன்னைப் போன்று விளங்குபவளும், ஆகிய அபிராமி அம்மையை, வேதங்கள் புகழ்ந்து சொல்லியபடி வழிபடுகின்ற, அடியவர்களைத் தொழுகின்ற அடியவர்களுக்குப் பல வாத்தியங்கள் ஆரவாரித்து மிகுதியாக ஒலிக்க, வெள்ளை யானையை ஊர்ந்து செல்லுகின்ற, சிறந்த இந்திர பதவியை அவ்வம்மை அளித்து அருள்வாள்.

(குறிப்பு) அம்பிகையின் அழகிய திருவுருவச் சிறப்பை ''மெல்லியநுண்ணிடை மின் அனையாள்'' என்றதனாற் புலப்படுத்தினர். அவளது தெய்விக நலச் சிறப்பின் மேன்மையினை ''விரிசடையோன் புல்லிய மென்முலைப் பொன்னனையாள்'' என்றதனால் விளக்கியருளினர். தவ யோகியர்க்குக் காட்சிதரும் நிலையினை வியந்து ''மின்னனையாள்'' என்றும், உலகியல் நிலையினர்க்கு எளிவந்து பயன்படும் தன்மையினை வியந்து ''பொன்னனையாள்'' என்றும் புகழ்ந்தார். புல்லுதல் இருவர்க்கும் ஏற்புடைத்தேயாயினும், அதனை விரிசடையோன் செயலாகவே குறிப்பிட்டார், அம்பிகையின் இயல்பும் எழிலும் புலப்படுதற்கு. 'புகழ்ந்து' என்னும் சொல்லினை மறையின் செயலாகவும், அல்லது தொழும் அடியார்களின் செயலாகவும், இரு வகையிலும் கொள்ளுதல் பொருந்தும். தாம்தாம் அறிந்த வகையிலும் விரும்பும் முறையிலும் அம்பிகையைத் தொழுதல் கூடுமாயினும், மிகவும் சிறப்புடையதும் இணையிலாப் பயன்தருவதும் ஆதல் பற்றி ''மறை சொல்லிய வண்ணம் தொழும் அடியவர்'' என்றார். அடியவரைத் தொழும் அவர்க்கே அரும் பெரும் பதம் தரும் எனவே, அடியவர்க்குத் தரும் நலங்கள் அளவிலவாதல் அறியப்படும். பகடு-யானை. வெண்பகடு-வெள்ளையானை, ஐராவதம். அடியவரைத் தொழுபவர்கள், இந்திர பதவியை

எளிதின் எய்தப் பெறுவர் என்பது கருத்து. வாளா இந்திரபதம் தரும் எனின், அதன் அருமை பெருமைகள் புலனுகா. ஆதலின், ''பல்இயம் ஆர்த்து எழ, வெண்பகடு ஊரும் பதம்'' என அதனைக் கிளந்து கூறிப் புகழ்ந்து ஓதினுர். பலஇயம் ஆர்த்து எழுதல், பெருமை. வெண்பகடு ஊர்தல் அருமை என்க. எவர் தருவார்? எது தரும்? எனச் சுட்டிக் கூறுது, பொதுவாகவே, குறிப்பிட்டதனுல், இவரும் ஒரு பொருட்டாக அதனைக் கேட்டுப் பெருர்; அவளும் அதனை ஒரு பெரிதாகத் தர முற்படாள்; ஆயின் பலவகை பேறுகளுள் இதுவும் ஒன்ருகத், தானே எளிதாக வந்து தலைப்படும் என்பது, புலப்படுத்தப்பட்டது. (91)

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக அடிமைகொண்டாய் ! இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர் போன வழியுஞ்செல்லேன் ;
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

(பொழிப்புரை) முதன்மை மிக்க தேவர்கள் ஆகிய, அயன், மால், அரன் என்னும் மும் மூர்த்திகளுக்கும், மற்றுமுள்ளார் எத்தகையவரும் வணங்கித் துதிக்கின்ற, அரும்புகின்ற புன் முறுவலை உடைய அபிராமி அம்மையே! பக்குவம் மிக்க நிலையில் அன்பு நிறைந்து கசிந்து உருகி, நின் திருவடிகளில் மனம் தோய்ந்து பற்றுக்கொண்டு, நின்னுடைய வுள்ளத்துக்கு இனிமையாக ஒழுகும்படி, என்னை நீ அடிமையாக ஆட்கொண்டருளினுய். ஆதலின், யான் இனிமேல் பிறர் ஒருவர் கொள்கைகளில் சென்று அறிவுக் கலக்கம் அடையமாட்டேன்; அவர்கள் செல்லுகின்ற வழியிலும் செல்லமாட்டேன்.

(குறிப்புரை) அம்பிகையின் உயர்வற உயர்ந்த சிறப்பினை ''யாவரும் போற்றும்'' என்ருர். அஃதே அமையுமாயினும் 'முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான்' என்னும் முறைமைபோல 'முதற்றேவர் மூவரும், யாவரும் போற்றும்' எனக்கிளந்து கூறினுர். அயன் மால் அரன் என்னும் மும்மூர்த்திகளும் தேவர்களுள் மிக்க முதன்மையுடையவராதலின், அவர் களை 'முதற்றேவர்' என்ருர். உம்மை சிறப்பும் முற்றும் எண்ணுமாம். 'முகிழ்நகை' என்பது அன்மொழித்தொகையாய், ஈண்டு அம்பிகையைக் குறித்தது. அம்பிகை நகை முகிழ்த்தற்குக் காரணம், போற்றுதலால் ஏற்படும் மகிழ்ச்சியன்று; அவர் போற்றும் புகழ்களெல்லாம் தனக்கு இயல்பாவனவே அல்லது, வியக்கப்படுவன அல்லாமையை அறிந்துவைத்தும், அவளது எல்லையற்ற புகழ்களுள் தாம் அறிந்த ஒரு சிலவற்றையே அவர்கள் ஈங்கும் ஊங்குமாகப் பிறழக் கூறி நிற்கும் முறைமை பற்றியேயாம், ''நின்புகழ் விரித்தனர் கிளங்குங்கால், அவை நினக்கு இறும்பூது அன்மை நற்கு அறிந்தோம் ஆயினும், நகுதலும் தகுதி ஈங்கு ஊங்கு நிற் கிளப்ப'' எனவரும் பரிபாடல் (4) வரிகள் ஈண்டுக் கருதி மகிழற்பாலன. உருகுதல், உலகியற் பொருள் களின் மாட்டுவைத்த பற்றினுலும் நிகழுமாதலின், அதனை விலக்கி அம்பிகையின்பாற் கொண்ட பக்தியின் முதிர்ச்சியாகிய பக்குவமிகுதி காரணமாக அன்பு மேலீட்டால் நிகழ்வது என்பார், 'பதத்தே உருகி' என்ருர்! அத்தகைய அன்பு மேலீடு, மனம் பிற பொருள்களைச் சென்று பற்றுது, அம்பிகையின் திருவடிகளிற் சென்று பதிந்து அதனைப் பற்றிநின்ருல் அன்றி நிகழாது என்பார், ''நின்பாதத்திலே மனம் பற்றி'' என்ருர். 'மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்' என்னும் சம்பந்தர் அருளுரை இங்குச் சிந்திக்கத் தக்கது. அம்பிகையின் பாதத்தில் மனம்பற்றி நின்ருல், உயிர்கள் அல்வழி நீங்கித் திருவருட் குறிப்பாகிய நல்வழி ஒழுகத் தலைப் படுமாதலின், ''உன்றன் இதத்தே ஒழுக'' என்ருர். இதம் - நன்மை, நல்வழி; இங்கிதம் எனினுமாம். இங்கிதம் - திருவுள்ளக் குறிப்பு. 'அடிமை ஆயினேன்' என்னுது ''அடிமை

கொண்டாய்'' என்றதனல், தம்முடைய செயலின்மையையும், அம்பிகையின் காரணம் அற்ற கருணைத் திறனையும், புலப்படுத்தினர். 'இனி' என்னும் சொல், கழிந்தகாலச் செயல்களுக்கு இரக்கம் தோற்றியது. 'யான்' என்னும் சொல், தன் முனைப்பில் வந்ததன்று : 'யானும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொக்கு வந்தது. இன்னர் என்று சுட்டிக் கூறத்தக்க மதிப்புடையவர் அல்லராதலின் 'ஒருவர்' எனப் பொதுவே கூறி அமைந்தார். மதம்—கொள்கை, 'மதத்தும்' என்னும் உம்மை தொக்கது. புறமதத்தின் கொள்கைகள் தெளிவு தராமையோடு, உள்ள தெளிவையும் அறவே போக்கி அறிவைக் கலக்கிக் கெடுத்தலின் 'மதிமயங்கேன்' என்றார். அத்தகைய பிறருடன் இனி எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளமாட்டேன் என்பார், 'அவர் போன வழியும் செல்லேன்'' என்றார். நல்லினம் சேர்ந்து உய்ய விழைவோர், புல்லினத் தொடர்பை அறுத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து. (92)

நகையே இஃது, இந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை ; மானே முதுகண் ; முடிவு இல் ; அந்த
வகையே பிறவியும் ; வம்பே மலைமகள் என்பது ; நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

(பொழிப்புரை) இந்த உலகங்களை எல்லாம் ஈன்றெடுத்த தாயாகிய அபிராமி அம்மைக்கு அரும்பிய தனங்கள் தாமரை அரும்புபோலும் ; அருளால் நிரம்பி முதிர்ந்த கண்கள், மருட்சியை உடைய மானின் கண்களாகும்! அவளுக்கு இறப்பு ஆகிய முடிவு இல்லை. அவ்வாறே முதலாகிய பிறவியும் இல்லை. அங்ஙனமாக, அவளை மலைக்கு மகள் என்று கூறுவது பயனற்றதே யாகும். ஒன்றற்கு ஒன்று ஒவ்வாத இவளுடைய பெருமை மிக்க இயல்புகளை நாம் ஆராய்ந்து அறிந்து போற்றுதல், நம் அளவுக்கு அப்பாற்பட்ட, நகைப்பை விளைவிக்கும் செயலேயாகும்.

(குறிப்புரை) அம்பிகையின் சிறப்பை ''இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகி'' என்பதனுற் புலப்படுத்தினர். நாம் அறிந்த உலகத்தை முதலிற் காட்டி, பின்னர் ஏனைய உலகங்களையும் உணர்த்துதற்கு '' இந்த ஞாலம் '' என்றும், '' ஞாலம் எல்லாம் '' என்றும் சுட்டினர். முகை . தாமரை அரும்பு. 'முகை' என்றதே அமையுமாயினும், தாமரை அரும்புபோல ஒரு காலத்து மட்டும் இருந்து கழிவதன்றாகலின் ''முகிழ்முலை'' என மேலும் விதந்து கூறினர் ; என்றும் ஒரு தன்மையாய் இளமைப் பொலிவுடன் திகழ்வது என்பது குறிப்பு. அம்பிகையின் கண்கள் பொதுவாக மானின் கண்கள் போன்று அழகிய தன்மையுடையனவே யாயினும், மருளும் தன்மையின்றி அருளும் இயல்பேயுடையன என்பார் '' முதுகண் '' என்றார். ''முதுகண்'' என்னும் சொல் கல்வெட்டுக்களிற் பாதுகாவலர் (Guardian) என்னும் பொருளிற் பயின்று வருதலும், இங்கு நாம் இயைபுபற்றி உணர்ந்து இன்புறற்பாலது, நம்மைப்போல அம்பிகைக்குப் பிறப்பும் இறப்பும் இல்லையாதலின் ''முடிவு இல் ; அந்த வகைவே பிறவியும்'' என்றார். இல்லை என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று 'இல்' என நின்றது, ''அந்த வகையே'' என்றது இறப்பைப் போலவே பிறவி இல்லாமையைக் குறித்தது. 'மலைமகள்' என்னும் தொடர், 'மலைக்கு மகளாகப் பிறந்தவள்' என்னும் பொருள்படும். பிறவி யில்லாதவளைப் பிறந்தவளாகக் கூறுவது பயனில் வீண் செயலேயாதலின் '' வம்பே மலைமகள் என்பது '' என்றார். 'வம்பு பயனின்மை' என்பது தொல்காப்பியம். அம்பிகையின் எல்லையற்ற பெருமைகளை, நாம் நம்முடைய சுட்டறிவு சிற்றறிவுகளால் ஆராய்ந்து அறிய முற்படுவது, பொருந்தாச் செயலாதலின் அதனை 'மிகை' என்றார்.

"கோணை பெரிதுடைத்து எம்பெருமானைக் கூறுதலே" என்று ஆழ்வார் கூறியபடி, அம்பிகையின் இயல்புகள் ஒன்றனோடு ஒன்று முரண்படுவனபோல உள்ளன. ஞாலம் எல்லாம் பெற்றும், தனங்கள் முகிழ்த்திருத்தல்; கண்கள் மான்போல விளங்கியும் மருட்சியின்மை; பிறவி யற்றவளாக இருந்தும், மலைமகள் எனப்படுதல் ஆகிய இயல்புகள்; ஒன்றற்கு ஒன்று முரண் பட்டு நிற்றல், வியப்பையும் விம்மிதத்தையுமே விளைவிப்பது என்றார், "**நகையே இஃது**" என்றார். (93)

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு மாறி, முன் சொன்னவெல்லாம்
தரும்பித்தர் ஆவர்என்றால், அபிராமி சமயம்நன்றே

(பொழிப்புரை) தன்னை விரும்பி வழிபடும் அடியார்கள் கண்களில் நீர்பெருகி, உடம்பில் மயிர்க்கூச்செறிந்து, பொங்கி நிறைந்த ஆனந்தம் மேலிட்டு, தம்முடைய அறிவை இழந்துநின்று, தேனுள்ளே வீழ்ந்த வண்டுபோல மயங்கிச், சொற்கள் தடுமாறி, முன்னே தாம் நினையாது கூறிய சொற்களெல்லாமும் கூடப், பொருளுடையனவாக அமையத்தக்க நிலையில், மாறச் செய்கின்ற பித்தர்களாக ஆவார்கள் என்றால், அவர்கள் கடைப்பிடிக்கின்ற அபிராமி அம்மையினுடைய சமயமானது, மிகவும் நல்லதேயாகும்.

(குறிப்புரை) அடியார்களின் இயல்பை "விரும்பித் தொழும் அடியார்" என்று குறிப் பிட்டார். தொழுதல், விருப்பம் இன்றி அச்சம் பற்றியும் நிகழும் ஆதலின், அடியார்கள் விரும்பித் தொழுங்கால் நிகழும் மெய்ப்பாடுகள் இவை என்பார், விழிநீர் மல்கல்—மெய்புளகம் அரும்புதல்—ததும்பிய ஆனந்தம் ஆதல்—அறிவிழத்தல்—சுரும்பிற் களித்தல்—மொழி தடுமாறு தல்—பித்தர் ஆதல்—முன் சொன்னவெல்லாம் தருதல் ஆகியவற்றைக் குறிப்பிட்டார். காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்குதலை '**விழிநீர்மல்கி**' என்றும்; 'மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்துதலை' '**மெய்புளகம் அரும்பி**' என்றும்; 'சொல்லொணாது இந்த ஆனந்தமே' என்றபடி பரவசம் உற்றிருத்தலை "**ததும்பிய ஆனந்தம் ஆகி**" என்றும்; அறிவு இழத்தற்கு வேறு பிறவும் காரணம் ஆகலாம் ஆயினும், இஃது ஆனந்தத்தின் மிகுதியால் நிகழ்வது எனற்கு "ஆனந்தம் ஆகி **அறிவு இழந்து**" என்றும்; அறிவை இழப்பினும் துன்பம் உறாது இன்பமே எய்துதலின், அந்நிலையினை உவமை முகத்தான் விளக்குவதற்குச் "**சுரும்பிற் களித்து**" என்றும்; அவ்வானந்த மேலீட்டால் நிகழும் செயல் இது என்பார் "**மொழிதடுமாறி**" என்றும் குறிப்பிட்டருளினர். "எனைநான் என்பது அறியேன் பகல் இரவாவதும் அறியேன்" என்றாற் போலத் தம்மை மறந்து, இறை யுணர்வே மேலிட்டுப் பரவசப்பட்டு நிற்றலின், அடியார்கள் "**பித்தர்**" எனப்பட்டனர். அவர்கள் முன் சொன்ன எல்லாம் தரும் "சத்திய சங்கற்பர்" ஆதலை, அமாவாசையினைப் பௌர்ணமி என்று அரசனுக்குப் பிறழக் கூறிய இவ்வபிராமிபட்டர் வரலாற்றினாலேயும் கூடத் தெளிய லாம். (94)

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்; எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!

(பொழிப்புரை) என்றும் அழிவு அற்ற குணமலையே! அருளாகிய கடலே! இமயமலை அரசன் பெற்றெடுத்த புதல்வியாகிய மெல்லியலே! நன்மையே வருவதாயினும் அல்லது தீமையே விளைவதாயினும், அவற்றைக் குறித்து நான் நினைப்பது ஒன்றுமே இல்லை. என்பால் இருப்பன வாக உள்ள உடல் பொருள் உயிர் ஆகிய எல்லாவற்றையும், நீ என்னை ஆட்கொண்ட அப்பொழுதே உன்னுடையது என்று நான் ஒப்படைத்துவிட்டேன். ஆதலின் என்னை நோக்கி வரும் இன்பம் துன்பம் ஆகிய எல்லாம் உன்னுடைய பொறுப்பாகும்.

(குறிப்புரை) குணக்குன்று, அருட்கடல், கோமளம் என்று அம்பிகையின் சிறப்புக்கள் கூறப்பெற்றன. இவற்றை ஒருவகையில் முறையே **சத்து சித்து ஆனந்தம்** என்னும் இயல்புகளைக் குறிப்பனவாகக் கொள்ளலாம் போலும். இப்பாடல், சிறந்த அடியார்களின் உள்ளத்திறனைத் தெள்ளத் தெளிய உணர்த்துகின்றது. நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், உண்மை அடிய வர்களின் உள்ளம் சிறிதும் சலனம் உறாது. இன்பம் எய்தினாலும், துன்பம் உற்றாலும், அவர்கள் ஒரு நிலையினராகவே இருப்பர். இன்பத்திற்கு மகிழ்தலும், துன்பத்திற்குச் சோர்தலும், அவர்கள்பாற் காண்டல் அரிது. இன்பம் நேரினும், துன்பம் சூழினும், யாவும் இறை செயல் என்றே தெளிந்து, தமது உடல் பொருள் உயிர் மூன்றையும் இறைவன்பால் ஒப்படைத்து, அனைத்தும் அவன் பொறுப்பு என்று அடைக்கலம் புகுந்து அடியவர்கள் கவலையற்றிருப்பர்.

இந்நிலையினை "**இருவினை ஒப்பு**" என்று தத்துவ நூல்கள் கூறும். இக்கருத்துக்களையே, "நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்; எனக்கு உள்ளவெல்லாம் அன்றே உனது என்று அளித்துவிட்டேன்" என்னும் வரிகள் உணர்த்துகின்றன. அறிவது—மதிப்பது. 'என்னுடையன' என்றோ, 'எனக்கு உரியன' என்றோ கூறாமல் **'எனக்கு உள்ளன'** என்று கூறிய நுட்பம் ஓர்ந்து உணரற்குரியது. 'எனது உனது என்று இருப்பார்' (81) என்றது காண்க. நின்னால் அளிக்கப்பெற்ற உடைமையைத் தற்போது வைத்திருப்பவன் யான், ஆனாலும் உடைமைகளுக்கு முழு உரிமையுடையவள் நீயே என்னும் கருத்தில் "உனது என்று அளித்துவிட்டேன்" என்றார். **'அளித்தல்'** ஈண்டு ஒப்படைத்தல். "அளித்து விட்டேன்" என்பது இருசொல் நீர்மைத்து. நின்னிடம் ஒப்படைத்து, என்னுடையன என்று பிறழக் கருதி யிருந்த உணர்வை விடுத்தொழித்தேன் என்பது கருத்து. "நன்னயம் செய்து விடல்" என்னும் திருக்குறளுரை ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

இப்பாடல் "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்" எனத் தொடங் கும் திருவாசகப் பாடலின் கருத்தை உட்கொண்டது. அதன்கண் "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" எனவரும் பகுதியைப் பின்பற்றியே "நன்றேவரினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை" என்னும் இப்பாடற்பகுதி அமைந்துள்ளது. இருவினையொப்பு (Equanimity) ஆகிய மனநலத்தின் சால்பினைப் பின்வருமாறு ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலக் கவிஞரும் புகழ்ந்து போற்றுகின்றார்:—

"ஊழால் விளையும் இன்ப துன்பங்களை, எவன் இறையருளின் கொடை என்று சமநோக் கோடு ஏற்றுக் கொள்ளுகின்றானோ; எவனுடைய உணர்ச்சியும் நுண்ணறிவும் முரண்படாமல் நன் கினிது ஒன்றுபட்டு, இணைந்து நின்று ஊழ் அணங்கின் விரல்களுக்கு விருப்பப்படியெல்லாம் ஒலிப்பதற்குரிய ஊதுகுழலாக இருக்க மாட்டாவோ, எவன் உணர்ச்சிகளுக்கு அடிமைப் படாத வனோ, அத்தகைய சிறந்த மனிதனை எனக்குக் காட்டு! அவனை என் இருதயத்தின் ஆழத்தில், உள்ளத்துக்கும் உள்ளுள்ளே பொன்போற் பொதிந்து வைத்துக்கொண்டு போற்றுகின்றேன். அத்தகையோர் இறையருளைப் பெற்றவர்கள் ஆவர்". (95)

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத், தம்மால்
ஆம் அளவும் தொழுவார், எழு பாருக்கும் ஆதிபரே.

(பொழிப்புரை) மெல்லிய கொடிபோன்றவளும், புறவிதழ்களுடைய அழகிய தாமரை மலர் ஆகிய கோயிலில் தங்கி வாழ்கின்ற யாமளவல்லியும், தன்னை வழிபடும் அடியவர்களுக்குத் துன்பம் இல்லாதபடி செய்பவளும், ஓவியராலும் எழுதிக் காட்ட இயலாத சாமளநிறம் வாய்ந்த அழகிய திருவுருவை யுடையவளும், எல்லாக் கலைகளுக்கும் நிலைக்களமாய் மயில் போன்ற சாயலை யுடையவளும், ஆகிய அபிராமியம்மையைத் தங்களால் எவ்வளவுக்கு எவ்வளவு முடியுமோ, அவ்வளவு மிகுதியாகத் தொழுது வழிபடுகின்றவர்கள், ஏழு உலகங்களுக்கும் தலைவர்கள் ஆவர்.

(குறிப்புரை) அபிராமி அம்மையின் திருவுருவம் மிக்க மென்மையும் நுடக்கமும் உடைமை பற்றிக் ''**கோமள வல்லி**'' என்று குறிப்பிட்டார். அல்லி—புறவிதழ். அம்பிகை தங்கி உறையும் இடமாதல்பற்றித் தாமரை '**கோயில்**' எனச் சிறப்பிக்கப்பெற்றது. யாமளம் என்னும் சாக்த ஆகமத்தாற் பெரிதும் புகழ்ந்து போற்றப்படுதலின், '**யாமளவல்லி**' என அம்பிகையை விதந்து ஓதினர். ஏதம்—துன்பம். தன்னை வழிபடும் அடியவர்களுக்கு நேரும் துன்பங்களை நீக்கி இல்லாமற் செய்தலின், ''ஏதம் இலாள்'' என அம்பிகையைப் புகழ்ந்து ஏத்தினர். '**இலாள்**' இல்லாதவள் என்னும் பொருளில் அன்றி, இல்லையாகும்படி செய்பவள் என்னும் பொருளில் வந்தது; பண்படியிற் பிறந்த வினைப்பெயர். 'மலைவு இல்லார்' என்னும் சிவஞான போத மங்கல வாழ்த்துப் பகுதிக்கு, ஆசிரியர் சிவஞான முனிவர் அருளிச் செய்த உரையினை இங்குக் காண்க.

அம்மை, பற்பல பெயரும் வடிவமும் உடையவள். அவைகளுள் சாமளம் என்னும் நிறமுடைய அழகிய வடிவமொன்றும், அம்பிகைக்கு உண்டு. அதனை வியந்து ''எழுதரிய **சாமள மேனி**'' என்றார். எல்லாக் கலைகளுக்கும் பிறப்பிடமும் நிலைக்களமும் அம்பிகையேயாதல் பற்றிச் ''சகலகலா மயில்'' என்று சிறப்பித்துரைத்தார். ஆம் அளவு - இயலும் வரையில்; மிகுதி

" A man that Fortune's buffets and rewards
Hast taken with equal thanks; and blest are those
Whose blood and judgment are so well commingled
That they are not a pipe for fortune's finger
To sound what stop she pleases Give me that man
That is not passion's slave, and I will wear him
In my hearts core, ay, in my heart of heart,
As I do thee''

—William Shakespeare

யாக என்றபடி, அம்பிகையைத் தொழும் முறைமை இஃதென்று கூறுவார் ''ஆம் அளவும் தொழுவார்'' என்றும்; அதற்குப் பயன் இஃதென்பார் ''ஏழுபாருக்கும் ஆதிபரே'' என்றும் குறிப்பிட்டார். 'அதிபர்' என்னும் சொல், 'ஆதிபர்' எனச் செய்யுள் விகாரமாய் நீண்டு வந்தது. 'ஏழு' என்பது ஒரு சொல்விழுக்காடு; அனைத்துலகுக்கும் என்பது கருத்து. (96)

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே,

(பொழிப்புரை) சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், சிவபெருமான், திருமால், அகத்தியர், தீமைகளை எதிர்த்துப் போர் புரி

திருவிடைமருதூர்க் கோயிற் கும்பாபிஷேக விழாவில் தஞ்சைத் துணையாணையர் திரு. ஜி. ஆதிமூலம், B. A., B. L., அவர்கள், மகாலிங்கப் பெருமானை வழிபடுதல்

கின்ற வேற்படையை உடைய முருகன், விநாயகர், மன்மதன் முதலிய, செயற்கருஞ் செயல்களைச் செய்து நிறைவேற்றிய புண்ணியர்கள் எண்ணில்லாதவர்கள், அபிராமி அம்மையையே போற்றி வழிபடுகின்றார்கள்.

(குறிப்புரை) 'தையல்' என்றது ஈண்டு அபிராமியம்மையைக் குறித்து நின்றது. சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரமன், உருத்திரன், திருமால், அகத்தியன், முருகன், விநாயகர், மன்மதன் முதலிய எல்லோரும் போற்றுவர் என்றது, நீவிரும் போற்றியுய்க என்னும் கருத்தை வற்புறுத்துதற் பொருட்டு. அம்பிகையைப் போற்றுபவர், இங்கே குறிப்பிட்ட ஒருசிலர் தாம் போலும் என நாம் எண்ணுமைக்காக, 'எண்ணிலர் போற்றுவர்' என்றார். 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்றபடி, முன்பு செய் தவத்தின் ஈட்டம் மிக்குடையவரே, அம்பிகையைப் போற்ற முற்படுவராதலின் 'புண்ணியர்' என்றும், போற்றுபவர் தாம் விரும்பும் செயல்கள் பலவும் நிறைவேறப் பெறுதலின், 'சாதித்த புண்ணியர்' என்றும் விதந்து சிறப்பித்தார். 'போற்றினர்' என்னது, 'போற்றுவர்' என்ற அதனால், அவர்கள் முன்னொருகாலத்தில் மட்டுமன்றி முக்காலத்தும் போற்றி யொழுகுதல் புலப்படுத்தப்பட்டது. ஆதித்தன் - சூரியன். அம்புலி - சந்திரன். அங்கி - அக்கினித்தேவன். அமரர்தம் கோன் - தேவேந்திரன். போது - தாமரை மலர். புராரி (புர+அரி)—முப்புரங்களை அழித்தவன்: உருத்திரன. முராரி (முர+அரி) முரன் என்னும் அசுரனை அழித்தவன்; திருமால். தென்திசைக்கண் உள்ள பொதிய மலையில் வாழ்பவர் ஆதலின், அகத்திய முனிவர் பொதிய முனி' எனப்பட்டார். காதுதல்-போர் செய்தல், கொல்லுதல். 'பொருபடை' என்றது இங்கு முருகனுக்குரிய வேலைக் குறித்தது. (97)

(தொடரும்)-ஆசிரியர்

மதிப்புரைகள்

திருவிடைமருதூர்க் கும்பாபிஷேக மலர்

அண்மையில் 15-7-70 அன்று, திருவிடைமருதூரில் ஸ்ரீ மகாலிங்கசுவாமிக்கு மகா கும்பாபிஷேக விழா, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பேரருட் சிறப்பால், மிகமிகச் சிறப்பாக நடைபெற்றதனை அன்பர்கள் அனைவரும் அறிவார்கள். அதுபோது நமது அறநிலைய ஆணையர்திரு. K. S. நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்களின் தலைமையில், தொழில் அதிபர் பொள்ளாச்சி திரு. என், மகாலிங்கம், B.Sc., M.I.E. அவர்களால், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்படி, வெளியிடப் பற்றதே, இச்சிறப்பு மலர்.

இதன்கண் திருவிடைமருதூர் பற்றிய திருமுறைப்பாடல்களும், திருப்புகழ் பிள்ளைத் தமிழ் முதலிய பாடல்களும், தொகுக்கப்பட்டுள்ளன. அடுத்துத் தமிழகத்துத் திருமடங்களின் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள் பலரின் ஆசியுரைகளும், தமிழக அமைச்சர்கள் முதலிய பெருமக்களின் வாழ்த்துரைகளும் இடம் பெற்றிருக்கின்றன. புலவர் பெருமக்களும், பேரறிஞர்களும், சைவ சித்தாந்தச் சான்றோர்களும் எழுதிய அரிய பெரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல, இம்மலரை அணி செய்கின்றன. ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயிலைப் பற்றியும், அஃது அமைந்துள்ள திருவிடைமருதூர்த் தலத்தைப் பற்றியும், இத்தலத்தைக் குறித்த பல்வேறு நூல்களைப் பற்றியும், பொதுவாகச் சைவத் திருமுறைகள் சைவத் சித்தாந்த நுட்பங்கள் பற்றியும், அறுபது (60)க்கு மேற்பட்ட பயன்மிக்க சிறந்த கட்டுரைகள், இம்மலரை மணங்கமழ்விக்கின்றன.

ஓவியர் 'சில்பி' அவர்கள் வரைந்த ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி, ஸ்ரீ மூகாம்பிகை ஆகிய தெய்வத் திருவுருவங்களின் மூவண்ணப் படங்களும், திருவெம்பாவைப் பாடல்களின் பொருளை விளக்கும் எழில்மிக்க வண்ண ஓவியங்களும், அழகிய பற்பல சிற்பக் காட்சிகளும் பிறவும், இம்மலருக்கு எழிலும் பொலிவும் தருகின்றன. மகாமகோபாத்தியாய டாக்டர் திரு உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், 1883-ஆம் ஆண்டில் எழுதிப் பதிப்பித்த ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம், ஸ்ரீ ஏகநாயகர் ஊசல், ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு என்பன, இம்மலருக்குத் தனிப் பெருஞ் சிறப்பை அளித்து நிற்கின்றன. சுருங்கக் கூறலுறின், இஃதொரு கவின் மிக்க கலைக்களஞ்சியமாகத் திகழ்கின்றது எனலாம்.

இதன் அடக்கவிலையே ஆறு ரூபாய்களுக்கு மேல் ஆகின்றது எனினும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள், தமது பெருங்கருணைத் திறத்தினால், அன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் அடையும் பொருட்டு, இதன் விலையை ஐந்து ரூபாய் (5 00) ஆகக் குறைத்துத் தரும்படி, கட்டளையிட்டருளியுள்ளார்கள். ஆதலின் 'பிற்பால் நின்று பேழ்கணித்தாற் பெறு தற்கு அரிய' இச்சிறந்த கும்பாபிஷேக விழா மலரை, ''உயர்திரு. மேலாளர், ஸ்ரீமகாலிங்கசுவாமி தேவஸ்தானம், திருவிடைமருதூர்'' என்னும் முகவரிக்குத் தொடர்பு கொண்டு, அன்பர்கள் அனைவரும் விரைந்து வாங்கிப் பயன்கொள்ள முந்துறுதல் நலம் ஆகும்.

—ஆசிரியர்

சிவாகமத் தியான ரத்தினாவளி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் வியாச பாரத கலாதி சதஸ் சமாஜம் (பதிவு செய்யப் பட்டது), சென்னை-20, பல சிவாச்சாரியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் ''சிவாகமத் தியான ரத்தினாவளி'' என்ற புத்தகத்தை ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களுடைய கட்டளையின் பேரில், சமீபத்தில் பிரசுரித்துள்ளது. இப்புத்தகம், அல்லூர் சமாஜத்தின் மேற்பார்வையில் நடந்துவரும் சிவாகம பாடசாலையின் அத்யட்சகர் ஸ்ரீ விசுவநாத சிவாச்சாரியார் அவர்களால் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கின்றது.

கணபதி, சுப்பிரமணியர், ஈசுவரன், சக்தி, பரிவாரமூர்த்திகள் முதலியவற்றிற்குச் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள இலக்கணங்கள், இப்புத்தகத்தில் ஒருங்கே தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆதிசைவ இளம் பாலகர்களுக்கு இந்த வெளியீடு மிகமிகப் பயனுள்ளதாகும். மேலும் சிவபூசைக்குரிய முத்திரைகளின் சித்திரங்களும், இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கும் விஷயங்கள், சிவாச்சாரியர்களுக்கு மிகவும் இன்றியமையாதனவாய்ப் பெரிதும் பயன்படும். ஆதலின் ஒவ்வொரு சிவாலய நூல் நிலையத்திலும், இப்புத்தகத்தை வாங்கி வைத்து, சிவாச்சாரியர்கள் பயன்படுத்தும்படி செய்யுமாறு, துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகிய அனைவரையும், இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்புத்தகத்தின் விலை ரூ. 2-50 மட்டும் ஆகும். இப்புத்தகம் வாங்குபவர்களுக்குப் பின் வரும் மற்ற இரண்டு புத்தக வெளியீடுகளும், இலவசமாக வழங்கப்படும்.

(1) **காலசந்தி பூஜாவிதி**
(2) **கேள்விகளும் விடைகளும்** (சிவாகம சம்பந்தமாக).

புத்தகம் கிடைக்குமிடம்

(1) ''ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் வியாஸ பாரத கலாதி ஸதஸ் சமாஜம், நம்பர் 20, முதல் மெயின் கிராஸ் ரோடு, காந்தி நகர், சென்னை-20''

(அல்லது)

(2) ''ஸ்ரீ என். விசுவநாத சிவாச்சாரியார், அல்லூர் வேதசிவாகம பாடசாலை, அல்லூர், திருச்சி ஜில்லா''.

—ஆசிரியர்.

திருக்கோயில் 12-ஆம் ஆண்டில் வெளிவந்த கட்டுரைகளின் பட்டியல்

1969 அக்டோபர் முதல் 1970 செப்டம்பர் வரை

ஆசிரியர் ந. ரா. முருகவேள்

1. அத்துவைத தத்துவ ஆசார்யர்கள் 9, 70, 130
2. அப்பரும் சம்பந்தரும் 378
3. அபிராமி அந்தாதி (தொடர்ச்சி) 62, 289, 478
4. அம்மை வழிபாடு 49
5. அயல்நாட்டு அறிஞரின் அன்புக் கடிதம் 359
6. அறிவியலும் இறையியலும் 236
7. ஆசாரக்கோவை 510
8. இந்து மதத்தின் சிறப்பு 326
9. இராசராசன் ஆட்சியும் மாட்சியும் 97
10. இராமலிங்கரும் சுந்தரரும் 275
11. இறையுணர்வு 505
12. இறைவழிபாடும் கோயில் தூய்மையும் 117
13. இறைவனின் இன்னருட்டிறன் 407
14. 'இனியன் இடைமருதன்' 551
15. உண்மை விளக்கம் (தொடர்ச்சி) 24
16. 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' 241
17. கடவுளுணர்ச்சி 430
18. கருவூர்த் தேவர் 353
19. காஞ்சியில் தெய்விகக் கலைவிழா 122
20. கோயில்களும் சமுதாய நலனும் 305
21. சங்க நூல்களில் இராமயணக் குறிப்புகள் 361
22. சங்கம் தரும் முத்தி 283
23. சக்தியும் சிவமும் 52
24. சக்தி பேதங்கள் 54
25. 'சிலந்தியார் வழிபட்ட நலங்கொள் கோயில்' 409
26. ஞானியார் சுவாமிகளும், மணிவாசகரும் 230

27. தகவுடையோர் புகழுரை 552
28. தாயுமான சுவாமிகளின் சமரச ஞானம் 464
29. திருக்குருகையர்கோன் திருவிருத்தம் 154, 293, 425
30. திருச்செந்தூர்க் கலிவெண்பா 318
31. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிஞ்சித் திணைவளம் 397
32. திருப்பாவைச் சிறப்பு 217
33. தேர்த்திருவிழா 445
34. திருவண்ணுமலையில் கார்த்திகைத்தீபம் 81
35. திருவள்ளுவர் உடன்படாத கொள்கைகள் சில 14
36. திருவள்ளுவரும் காந்தியடிகளும் 1
37. திருவருட்பிரகாச வள்ளலாரும், திருஞானசம்பந்தரும் 265
38. திருவாசகத்தில் ஒரு மணிவாசகம் 418
39. திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் 145
40. திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை 414
41. திருவுத்தர கோசமங்கை 545
42. 'தெய்வம் என்பதோர் சித்தம்' 313
43. தொன்னெறிமொழிவயின் தொடர்கள் 283
44. பிரபுலிங்க லீலை 339
45. 'பெண்ணின் நல்லாள்' 165
46. பெரிய அன்பின் வரகுண தேவர்' 44
47. நீத்தல் விண்ணப்பம் (பொழிப்புரை) 546, 576
48. மகாலிங்கப் பெருமான் 423
49. ''மதிமயங்கி'' 489
50. மாலை மாற்றுப் பதிகம் (உரை) 515
51. வழிபாடும் தத்துவங்களும் 457
52. வித்தகச் சான்றோர் விவேகானந்தர் 571
53. விநாயகர் பெருமை 32
54. ஸ்ரீ வைஷ்ணவத் திவ்விய தேசங்கள் 495, 580

பிற அறிஞர் கட்டுரைகள்

அண்ணங்கராசாரியார்

1. தருமம் அறிந்தவன் 41, 75
2. திருப்பாவை ஜீயர் 260, 304
3. பட்டர் பெருமை 389
4. பெரியாழ்வார் ஆண்டாள் வரலாறு 390
5. பெரிய வாச்சான்பிள்ளை வைபவம் 324
6. மணவாளமாமுனிகள் வைபவம் 101
7. விசிஷ்டாத்வைதசாரம் 434
8. ஸ்ரீ வைஷ்ணவச் செல்வங்கள் 524

இராமகிருஷ்ணையங்கார் (நல்லான்)

1. 'இருவரங்கள்' 540
2. பழியின் பரிசு 566

கலைஞர் மு. கருணாநிதி (முதல்வர்

1. ஏழையின் சிரிப்பிலே இறைவன் 272
2. காவியத் திருநாள் 223
3. வாழ்வெனும் பாதையில் 369

சுத்தானந்த பாரதியார்

1. ஐன்ஸ்டைனும் அண்டப்பகுதியும் 93
2. தித்திக்கும் திருக்கோவையார் 247

தற்புருஷ தேசிகர், ஸ்ரீ

1. ஆயிரம் நாமம் 527
2. தன்மை அறிவார் இல்லை 139
3. மாற்றி நின்றார் வழி 331
4. விதியும் துதியும் 169

தாத்தாச்சாரியார், என். எஸ்.

1. ஆழ்வார் விடுத்த வினு 348
3. மதுர கவிக்கு ஓர் அமுதகவி 136

மதுரை முதலியார், கு.

1. கம்பர் கண்ட அயோத்தி 521
2. கம்பர் கண்ட கோசலம் 386
3. வைணவம் 343

மயிலை, சீனி. வேங்கடசாமி

1. திருக்காரிக்கரை 310
2. திருவக்கரை 393

முருகேச முதலியார் (நல்)

1. திருவள்ளுவர் கண்ட மெய்ந்நெறி 89
2. ஸ்ரீ கண்ட சிவாச்சாரியார் 345

வேங்கடராமையா, கே. எம்.

1. முதுமொழி 177
2, வாரணவாசி 584

தனிக் கட்டுரைகள்

1. அருணாசலம், டி. என்.—மணிவாசகர் திருவுள்ளம்
2. அருணை வடிவேல் முதலியார், சி.—திருக்குறளில் வழிபாடு 195
3. அழகரடிகள் (குருகுலம்)—திருக்குறளில் ஆன்மநேய ஒருமை 187
4. அழகிய சிங்கர் (ஸ்ரீமத்)—திருப்பாவையின் சாரம் 165
5. அறநிலைய அமைச்சர் (மாண்புமிகு கே. வி. சுப்பையா)
அறநிலையத் துறையின் அரும்பணிகள் 58
6. அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன்—
கும்பாபிஷேக வாழ்த்துச் செய்திகள் 483, 485
திருத்தணிகையில் தெப்பவிழா 530
7. இராமலிங்கனார், கி.—திருக்குறளில் அன்புநெறி 210
8. மகாபாரதம்—கிருபானந்தவாரியார் 28, 78, 127, 171, 256, 296, 324, 382, 451, 486, 533
9. குன்றக்குடி அடிகள் (தவத்திரு)—சமயமும் சமுதாயமும் 45
10. ஞானப்பிரகாச சுவாமிகள் (காஞ்சி)—பொய்யா விளக்கு 88
11. சங்கராச்சார்யசுவாமிகள் (ஸ்ரீ ஜகத்குரு)—திருப்பாவை, திருவெம்பாவை 160
12. சாந்தலிங்க, இராமசாமி அடிகள் (தவத்திரு)—அறிவு அறியாமை 180
13. சுந்தரசாமிகள் (தவத்திரு)—திருக்குறளில் அருள்நெறி 143
14. துரையரங்கனார்,—உய்தி பெற ஒரு பதிகம் போதுமே 205
15. பரமசிவானந்தம் (அ. மு. ப)—முடிவுகட்டிவிடாதீர்கள் 200
16. மதுரை ஆதீனகர்த்தர்,—திருக்குறளுக்குத் தெளிவுதரும் அருளுரை 184
17. முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் (தவத்திரு)—திருக்குறளில் திருவடி 141
18. வச்சிரவேல் முதலியார் (காஞ்சிபுரம்)—திருக்குறளில்திருவடி 25
19. வெள்ளை வாரணர், க.—திருமந்திர மாலை 251

158582



திருவிடைமருதூர்க் கும்பாபிஷேக விழாவில், நமது அறநிலைய ஆணையர்
திரு. **கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.** அவர்கள், தலைமையுரை நிகழ்த்துதல்.

Vol. 12 - No. 12 THIRUKKOIL Regd. No. M. 7039

திருவிடைமருதூர்க் கும்பாபிஷேக விழாவில், திருவாவடுதுறை - தருமபுரம் மதுரை ஆகிய ஆதீனங்களின் குரு மகா சந்நிதானங்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல் (15-7-70).

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.